விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 22 வியாழக்கிழமை (05.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 168

# பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு இல்லை

## இந்தியாவுக்கு தெளிவுபடுத்தினார் மகிந்த

(கொழும்பு)

*13-வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மோடியிடம் தெளிவுபடுத்தியுள்ளார். எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய கேள்வி ஒன்றிற்குப் பதிலளித்த அமைச்சர் பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.*

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற சந்திப்பின் போது 13-வது திருத்தச் சட்டம் பற்றி இலங்கையின் நிலைப்பாட்டை இந்தியாவுக்கு தெளிவாக விளக்கியதாக அரசாங்கம் கூறியுள்ளது.

13-வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என இலங்கை பிரதிநிதிகளுக்கு தலைமை தாங்கிய ஜனாதிபதி கூறியதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

புதிய இந்திய பிரதமராக மோடி பதவியேற்ற பின்னர் மறுநாள் டில்லியில் நடைபெற்ற அவருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விககிரமசிங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இதனைக் கூறினார்.

டில்லியில் இரண்டு தலைவர்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஒரு பகுதியாக 13-வது திருத்தச் சட்டம் பற்றியும் பேசப்பட்டதாக வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் ரணில் விளக்குமாறு கோரினார்.

அனைத்து பிரச்சினைகள் பற்றியும் இதன் போது கலந்துரையாடப்பட்டதாகவும் 13-வது திருத்தம் பற்றி ஆழமாக கலந்துரையாடப் படவில்லை எனவும் பீரிஸ் குறிப்பிட்டார்.

இலங்கை பிரதிநிதிகள் பார்வைகள் மற்றும் நிலைப்பாடுகள் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்தினர். பிரச்சினைக்கு தீர்வுகாண

19 ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சுப் பதவியில் இருந்தால் ஜனாதிபதி மகிந்தவுக்கு நல்லதல்ல

### ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி அமைச்சு பதவிகளை வகிப்பது நல்லொழுக்கமுடையதல்ல என ஜாதிக ஹெல உறும்யவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பொறுப்பின் கீழ் உள்ள அமைச்சுக்களில் தவறுகள் நேர்ந்தால் அமைச்சர் என்ற வகையில் அவரை நீதி மன்றத்தில் நேர்நிலைப்படுத்த முடியாது என்பதால் அரசியல் அமைப்புச் சட்டத்தில் அதனை திருத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வைபவம ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடத்தப்படுவதற்கு முன்னதாக அதனை திருத்த வேண்டும். இதனை வலியுறுத்த மக்களுக்கு முதுகெலும்பு இருக்க வேண்டும்.

இவ்வாறான விடயங்கள் பற்றி பேச எவருக்கும் அஞ்ச வேண்டிய் தேவையில்லை.

19 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை மீது மோடி மந்திரம் வேலை செய்ய தொடங்கிவிட்டது

### மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

இரண்டு வாரங்களுக்கு முன்னர் 13-ம் திருத்தமோ அல்லது 13 ப்ளஸ்என்ற அதற்கு மேல் செல்லுவதோ, எதுவென்றாலும், பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வந்து பேசுங்கள், வராவிட்டால் எதுவும் கிடையாது என்று சொன்ன அரசாங்கம், இன்று 13-ம் திருத்தத்தில் பொலிஸ் அதிகாரத்தை தவிர ஏனையவற்றை அமுல் செய்ய தயார் என இந்திய அரசுக்கு அறிவித்துள்ளது.

இந்த இரண்டு வாரங்களுக்குள் என்ன நிகழ்ந்தது? பிரதமர் நரேந்திர மோடியின் மோடி



மந்திரம் வேலை செய்ய ஆரம்பித்து விட்டதா?

19 ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ ஜெனரலாக பொன்சேகா வரமுடியாது

### அரசாங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை இராணுவ ஜெனரலாக ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது என அரசாங்கம் நேறறு அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேறறு எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன,

பொன்சேகாவுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டதால், அவர் இராணுவப்பட்டத்தை இழந்தார் எனக் கூறியுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க....

## காணாமல் போனவர் வவுனியா சிறையில்!

(யாழ்ப்பாணம்)

வவுனியா வைத்தியசாலைக்கு சென்ற முள்ளியவளையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் குறித்த குடும்பஸ்தர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

கடந்த 28 திகதி காணாமல் போனவர் தொடர்பில் இதுவரை பொலிஸார் குடும்பத்தினருக்கு அறி

19 ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவத்தில் இணைந்தவர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு

### இன்று பலாலி படைத் தலைமையகத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து பாதுகாப்பு படைக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு மாவட்ட பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் வைத்து இன்று வியாழக்கிழமை நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது.

இராணுவத்தின் சிவில் பாதுகாப்பு படையில் தமிழ் இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்தின் பல மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கமைய புதிதாக இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்

19 ஆம் பக்கம் பார்க்க....

## 44 ஆயிரம் பேர் மழையால் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை 44 ஆயிரத்து 91 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக 103 வீடுகள் முழுமையாகவும், 683 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்டவர்கள் 23 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 23 பேர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காணாமல் போயுள்ளதாக அனர்த்த

19 ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.போதனா வைத்தியசாலையின் சி ரி ஸ்கானர் பழுதடைந்தது

### நோயாளர்கள் பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ள சி ரி ஸ்கானர் பழுதடைந்துள்ளதால் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர் கொண்டுள்ளனர்.

சி ரி ஸ்கானர் பழுதடைந்ததன் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்கள் அம்புலன்ஸ வண்டி மூலம் வவுனியா மற்றும் அநுராதபுரம் வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சி ரி ஸ்கான் செய்யப்பட்டு மீளவும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படுகின்றனர். இதனால் நோயாளர்கள் தேவையற்ற அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியதாக உள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள சி ரி ஸ்கானரின் பயன்பாட்டு எல்லை முடிவடைந்தபடியால் இனி மேல் அதனை திருத்த முடியாது எனவும் எனவே புதிய சி ரி

19 ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சர் ஹக்கீம் மீது நம்பிக்கையில்லா தீர்மானம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீமிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானமொன்றை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆளும் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக இணைந்து இவ்வாறு நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்ற உத்தேசித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. சட்டக் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பிலான புதிய நடைமுறையை

19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு

# கருத்துக் கணிப்பை மேற்கொள்ள தமிழ்க் கூட்டமைப்பு தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழர்களின் நிரந்தர தீர்வு தொடர்பில் புலம்பெயர் தமிழ் மக்களிடமும் ஈழத்தமிழர்களிடம் கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானத்துள்ளது.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் தனித் தமிழீழத்திற்கான பொது வாக்கெடுப்பை நடத்தக் கோரி ஐ.நா சபையில் இந்தியா தீர்மானம் கொண்டு வரவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ள நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இக் கருத்துக் கணிப்பினை நடத்த முடிவு செய்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நீர்வேலிப் பணிமனையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் தெரிவிக்கையில்,

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் பல ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன.

பல்வேறு சந்தர்ப்பங்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் ஒப்பந்தங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரை ஒன்றும் நடக்கவில்லை.

யுத்தம் முடிவடைந்து பல ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்படவில்லை. மாறாக இராணுவத்தின் அடக்குமுறை, தமிழர்களின் காணிகளை இராணுவம் சூறையாடுதல், தொழில் பறிப்பு என அடக்கு முறையே அதிகரித்துச் செல்கின்றது.

ஈழத்தமிழர்கள் இங்கிருக்க முடியாத சூழ்நிலையே இங்கு இராணுவத்தினால் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இந்தியாவின் புதிய அரசாங்கம் இலங்கையின் பிரச்சினையை எவ்வாறு கையாளப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மகிந்த அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வந்தால்தான் இதுபற்றி பேச முடியும் என பழையது போல் கூறிவருகின்றது.

இதற்காக tnaproposal@gmail.com என்ற பிரத்தியேக மின்னஞ்சல் முகவரி ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இம் மின்னஞ்சல் முகவரி ஊடாக அனைவரும் கருத்துக்களினை அனுப்பி வைப்பதோடு பருத்தித்துறை நீர்வேலி தெற்கு, நீர்வேலி, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிகளில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பணிமனைக்கு தமது கருத்துக்களை அனுப்பி வைக்கமுடியும்.

இக் கருத்துக்களினை எதிர்வரும் யூன் மாதத்துக்குள் அனுப்பி வைப்பதன் மூலம் அடுத்துவரும் இரு மாதங்களிற்குள் இக் கருத்துக்களினை தொகுத்து மக்கள் கருத்து சார்ந்த தீர்வுத்திட்டம் ஒன்றினை உருவாக்கமுடியும்.

இதற்கென யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், அரசியல் அறிவு சார்ந்தோர் உள்வாங்கப்பட்ட ஒரு விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது என்றார். (எ-4)

# வளலாய் மக்களை குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை

## கூட்டமைப்பு குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வளலாய் நிலத்துக்குரிய மக்களினை அந்நிலத்திலேயே குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைமைகளிடம் தமிழ்க் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

பருத்தித்துறை வீதி நீர்வேலியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உப அலுவலகத்தில் நேற்று மு.ப 10.30 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வளலாயில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட காணி அபகரிப்பு நிறுத்தப்பட்டுள்ளதாக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் தலைவருள் ஒருவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியிருந்தார்.

எனினும் தற்போது வளலாயில் 250 ற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளது.

தற்போது அங்கு காடழிப்பு நடைபெற்று வருவதோடு அப்பகுதியின் வலி.கிழக்கு மக்களினை குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளினை மேற்கொண்டுள்ளனர்.

வளலாய் நிலத்திற்குரிய மக்கள் இடம் பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் தங்கியுள்ள நிலையில் அம்மக்களினை அவ்விடத்தில் குடியளமர்த்தாமல் இராணுவத்தையோ அல்லது வேறுஇடத்து மக்களினை குடியேற்றுவதனை ஏற்க முடியாது.

காலம்காலமாக இருந்த மக்களினை வெளியேற்றிவிட்டு அவர்களது நிலங்களினை இராணுவம் சுவீகரிப்பதோ அல்லது வேறிடத்து மக்களினை அவர்களது நிலங்களில் குடியமர்த்துவதோ ஏற்க முடியாது என்றார். (எ-4)

# யாழ்ப்பாணத்தில் புத்தகத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.டோரா புத்தக நிலையம் கொழும்பு கேசவன் புத்தக நிலையங்களின் ஏற்பாட்டில் புத்தகத் திருவிழா என்னும் மாபெரும் தமிழ்ப் புத்தக கண்காட்சியும் மலிவு விற்பனையும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இன்று யூன் 05 வியாழக்கிழமை ஆரம்பித்து யூன் 12 வரை நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வு எழுத்தாளர் கே.ஆர். டேவிட் தலைமையில் காலை 10 மணிக்கு நடைபெறும். பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதுவர் எஸ்.டி. மூர்த்தி கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைப பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா,

சிறப்பு விருந்தினர்களாக எழுத்தாளர்கள் என்.எஸ். செல்வராசா, அநாதரட்சகன் ஆகியோரும்,

கவிஞர்கள் ந.சத்தியபாலன், எஸ்.சிவசிதம்பரம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (எ)

கேசவன் புத்தக நிலையம்
மற்றும்
டோரா புத்தக நிலைய ஏற்பாட்டில்
யாழ் நகரில் முதல் முறையாக
"புத்தகத் திருவிழா"
வாசிப்பை நேசிப்போம்

மாபெரும்
தமிழ்ப் புத்தகக்
கண்காட்சியும்
மலிவு விற்பனையும்
வீரசிங்கம் மண்டபம்
ஜூன் 05 முதல் ஜூன் 12 வரை
காலை 9.30 முதல் மாலை 7.00 வரை
பல்லாயிரக் கணக்கான தலைப்புக்களில் லட்சக்கணக்கான எண்ணிக்கையில் அதிரடி விலைக்கழிவுகளுடன்.
அனைவரையும் அழைக்கின்றோம்

MOBILE PHONE REPAIRING COURSE
(கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி)
நீங்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவரா? சுயதொழில் ஒன்றை எதிர்பார்ப்பவரா? வேலைசெய்துகொண்டு பகுதிநேரமாக வருமானம் ஈட்டவேண்டுமா?
4 days course
புதுப்பொலிவுடன் யாழ்நகரில உங்கள் எதிர்காலத்துக்கு மாதம் 150,000/-க்கு மேல் வருமானம் ஈட்ட ஒருவாய்ப்பு.
திருத்தும் துறையில் 10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 2000ற்கும் மேற்பட்ட மாணவர்களைஉருவாக்கியமுதற்தர ஆசிரியருமான Ganesh.K.
பாடநெறிக்கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம்பாதிக்கமுடியும். நவீன Mobile Phone Repairing முறைகள் பயிற்றுவிக்கப்படும.
BTEC BRITISH TECHNOLOGY ENGLISH COLLEGE
#21, Sirampiyadi lane Jaffna.
TP: 021 790 4468
MO: 0777 444 225
(C-7565)

மிக குறைந்த விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு – மதுரை | –16500 | RTN |
| கொழும்பு – சென்னை | –21900 | RTN |
| கொழும்பு – திருச்சி | –22400 | RTN |
| கொழும்பு – டோகா | –26000 | O/W |
| கொழும்பு – பெங்களூர் | – 27600 | RTN |
| கொழும்பு – மலேசியா | –30000 | RTN |
| கொழும்பு – சிங்கபூர் | –30200 | RTN |
| கொழும்பு – பிரான்ஸ் | –45500 | O/W |
| கொழும்பு – லண்டன் | –44800 | O/W |
| கொழும்பு – சுவிஸ் | –83500 | RTN |
| கொழும்பு – கனடா | –105700 | o/w |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்
யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
Nation Popular Travels & Tours
#128, Brown Road, Jaffna
128.பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0114375357, 0773083820
0214 920 920
நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்

IMMEDIATE VACANCIES IN A TOURS & TRAVEL COMPANY
- FEMALE OFFICE/ ADMIN ASSISTANT
- AGE 18 - 28
- Salary 15000/- + Allowance
FORWARD YOUR CV WITH IN 7 DAYS, by post/mail
No.11, Nanthavil Lane, Kokuvil East, Kokuvil.
winstars1237@gmail.com
(6572)

தொடர்ந்தும் உங்கள் சேவையில்....
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுப்பு வகைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து
Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392
WESTERN UNION MONEY TRANSFER
(C-7562)

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
பழைய மாணவர் தாய்ச்சங்கம்
கந்தரோடை சுன்னாகம்
பழைய மாணவர் சங்க விசேட பொதுக் கூட்டம்
பழைய மாணவர் சங்க விசேட பொதுக் கூட்டம் 08/06/2014 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் நடைபெறும். தவறாது சமுகமளிக்கவும். இந்த விடயத்தை அனைத்துப் பழைய மாணவர்களுக்கும் தெரிவித்து அழைத்து வரவும்.
விடயம்
120-வது வருட கொண்டாட்டம்
லயன் சி.ஹரிகரன்
(செயலாளர்)
(சி-7566)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவதனால் தமிழ்மக்களுக்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை

## ஜே.வி.பி.பொதுச்செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரங்களை கொடுப்பது தமிழ் மக்களுக்கான தீர்வாக அமையப் போவதில்லை. தமிழ் மக்களை பாதுகாக்க வேண்டுமாயின் சுயாதீன விசாரணையினை நடைமுறைப்படுத்த வேண்டும் என ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

சர்வதேச விசாரணையினைக் கோருவது கூட்டமைப்பின் சுயநலப் போக்கினையே வெளிப்படுத்துகின்றது. தமிழர்கள் விடயத்தில் தமிழ் கட்சிகள் கூடிய கவனமெடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கான பொலிஸ அதிகாரம் வழங்கப்படாது என்ற அரசாங்கத்தின் கருத்து தொடர்பில் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மாகாண சபைகளுக்கு பொலிஸ அதிகாரம் வழங்குவதனாலோ அல்லது தவிர்ப்பதனாலோ தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கப் போவதில்லை.

தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது வடக்கில் சுதந்திரமானதும் தமக்கான உரிமைகளை பெற்றுக் கொள்ளும் தீர்வு ஒன்றினை மட்டுமே.

யுதத கால கட்டத்தில் விடுதலைப் புலிகள் செய்தவையும் பின்னர் இராணுவ அடக்குமுறைகளும் தமிழ மக்களை பெரிதும் பாதித்து விட்டதென்பதே உண்மை.

அதனை நிவர்த்தி செய்து சமூகங்களை ஒன்றிணைக்கும் வேலைததிட்டம் இன்று அவசியமாகவுள்ளது.

அதை விடுத்து மாகாண சபைகளுக்கான அதிகாரங்களையும் பொலிஸ் அதிகாரங்களையும் கேட்பது தற்போது அவசியமற்றதே.

மேலும் யுத்த குற்றங்கள் தொடரபில் ச்ரவதேச விசாரணையொன்றினைக் கோருவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடகமே. தமது சுயநல அரசியலை செய்வதற்காக தமிழர்களின் வாக்குகளை தக்க வைக்கும் தந்திரத்தினையே கூட்டமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

சர்வதேச விசாரணையொன்று, இடம்பெறுவதனாலோ நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை எனத் தெரிவித்தார். (2)

# புகையிரத கடவை வேலை நிமிர்த்தம் நாளை வீதிமூடல்

பளை- காங்கேசன்துறை புகையிரதக் கடவை வேலைகளுக்காக யாழ்- பருத்தித்துறை வீதியில் 2 ஆம் கிலோமீற்றரில் ஆரியகுளம் சந்திக்கு அருகில் உள்ளபுகையிரதக் கடவைப் பகுதியானது நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 7 மணிவரை மூடப்பட்டிருக்கும் என மத்திய பொறியியல் உசாவுத்துறைபணியகம்அறிவித்துள்ளது.


எனவேஅன்றையதினம்கனரக வாகனங்கள், பேருந்துஎன்பனஆஸ்பத்திரி வீதி, விக்டோறியா வீதி, ஸ்ரான்லி வீதியூடாக யாழ்.நகர வீதியை அடையலாம் என மேலும்அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்.மாநகரசபையினர் நீர் வழங்கல் குழாய்களை நகர்த்தும் முகமாக மேற்படி வீதியின் அரைப்பகுதியை மூடி வேலை செய்வார்கள். வாகனங்கள் மீதி அரைப் பகுதியூடாக பிரயாணம் செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

உ

சிவமயம்

ஸ்ரீ அம்மா பகவான் சரணம்



## அந்தியேட்டிக் கிரியை, 31 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பூஜை, நினைவஞ்சலி உரைகள்

கடந்த (06.05.2014) செவ்வாய்க்கிழமை ஸ்ரீ அம்மா பகவானின் பாதார விந்தங்களைப் பற்றிக் கொண்டு சத்திய லோகத்தில் சரணடைந்த

**எமது குடும்பத் தலைவர்**
**அமரர் திரு.சி.க.சிவலிங்கம் ஜி**

(முன்னாள் அதிபர், விளானை கல்வி நிலையம், ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர் (காரைநகர், தொல்புரம்), ஸ்தாபகர், ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்கம், சொர்ணாலயம், சுழிபுரம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 03.06.2014 செவ்வாய்க்கிழமை அன்று காரைநகர் கசூரினா கடற்கரையில் நடைபெற்றதுடன் ஆத்மசாந்திப் பூஜைகள், 31 ஆம் நாள் நினைவஞ்சலி உரைகள் 05.06.2014 இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணிமுதல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தாங்கள் தங்கள் குடும்பத்தினர் சகிதம் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அன்று நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

தான் பிறந்த மண்ணில் மாத்திரமல்ல இடம்பெயர்ந்து சென்ற இடமெல்லாம் சுழிபுரம், நுணாவில் கிராமங்களிலும் பொதுச் சேவையே தன் மூச்சாகக் கொண்டு மெழுகுதிரி போல ஊணினை உருக்கி கல்விச் சேவை அரச சேவை ஆன்மீக சேவையென பல வழிகளிலும் உழைத்த எம் குடும்ப தலைவர் ***அமரர். திரு. எஸ்.கே.சிவலிங்கம் ஜி*** அவர்களின் இறுதி நேரத்தில் உயிருக்காகப் போராடிய வேளை உயிர் காக்க அரும் பணியாற்றிய யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர்கள், தாதியர், சிற்றூழியர்கள் அனைவருக்கும் உடனிருந்து குடும்ப அங்கத்தவராக உதவிபுரிந்த திரு. சிவாவுக்கும் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்த நண்பர்கள், உறவினருக்கும் இறுதிக் கிரியையின் போது ஆறுதல் அளித்த சகல உள்ளங்களுக்கும் தொலைபேசி மூலமும் நேரிலும் இரங்கல் செய்தி கூறி எம்மைத் தேற்றிய அனைத்து உள்ளங்களுக்கும் மலர் வளையம் சாத்தி பனர் மூலம் தம் துயரைப் பகிர்ந்த யாழ். மாவட்ட ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்கம் சொர்ணாலய அமைப்பாளர்களுக்கும் வலம்புரி ஆசிரியர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலம் தம் துயரை வெளிப்படுத்திய சகல பொது நிறுவனங்களுக்கும் தனிப்பட்ட முறையில் பிரசுரித்த அன்புள்ளங்களுக்கும் இறுதிக்கிரியை அந்தியேட்டிக் கிரியைகளைத் திறம்பட நடத்திய அந்தணருக்கும் வீட்டுக்கிருத்திய பூஜையை நடத்தி வைத்த குருக்கள் ஐயாவுக்கும் உதவியாளருக்கும் ஆத்மசாந்தி உரையாற்றிய சகலருக்கும் எமது அழைப்பை ஏற்று சிரமம் பாராது எமது இல்லம் வந்து இந்நிகழ்வைச் சிறப்பித்த அன்பு நெஞ்சங்கள் இனிய உறவுகள், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**நெல்லியான் வீதி, சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். 077 7651719**

**இங்ஙனம் குடும்பத்தினர்.**

(6571)

# நல்லின விதை நடுகை பொருட்கள் விற்பனை

தேசிய விதை நாற்று விற்பனை ஊக்குவிப்பு வாரமாக கடந்த திங்கட்கிழமையில் இருந்து நாளை மறுதினம் சனிக்கிழமை வரை விவசாயத் திணைக்களத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

இதற்கமைய நேற்று முன்தினத்திலிருந்து நர்ளை வெள்ளிக்கிழமை வரை யாழ்.மாவட்ட செயலகத்திலுள்ள விவசாயக் கிளையில் சிபாரிசு செய்யப்பட்ட நல்லின விதை நடுகைப்பொருட்கள் விற்பனை செய்யப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வானது நேற்று முன்தினம் காலை மாவட்ட செயலாளரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இங்கு பழமரக்கன்றுகள், மரக்கறிவிதைகள், MI Green மிளகாய் விதைகளுட்பட்ட ஏனைய வயற்பயிர் விதைகள் திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இவற்றினைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் மாவட்ட விவசாயக் கிளையில் பெற்றுக் கொள்ள முடியுமென அவர் அறிவித்துள்ளார். (2)

# இராசி பலன்

**05.06.2014**
**(வைகாசி 22, வியாழக்கிழமை)**
**சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு**
**சப்தமி முற்பகல் 11.12 மணிவரை**
**மகம் முற்பகல் 9.11 மணிவரை**
**இராகுகாலம் 1.22-2.52 மணிவரை**
**சுபநேரம் 7.22-8.52 மணிவரை**

**வளவன்**

**மீனம்:** நிர்வாக திறமை வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியமான நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மேடம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர் கள், பிறருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள், சுபகாரியப் பேச் சுக்கள் முடிவாகலாம்.

**இடபம்:** சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், தொலைபேசி மூலம் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, ரோகபயமுண்டு.

**மிதுனம்:** அந்நியர் சந்திப்புண்டு, புதிய பொருட்சேர்க்கைகள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு, உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** இனிய சம்பவங்கள் ஏற்படும் நாள், குடும்பத்தில் அந்நியயோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடிவரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலைகள் உருவாகும், தொலைபேசி செய்திகள் மனமகிழ்ச்சி தரும் வகையில் அமையலாம்.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, சிலர் கௌரவக்குறைவாக நடந்து கொள்ளலாம்.

**சிம்மம்:** குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம், திடீர் பயணங்கள் உருவாகும், ஆழ்ந்த சிந்தையுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**தனுசு:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், எதிர்ப்பாக இருந்தவர்கள் விலகுவர், பயணங்களால் பலனுண்டு, சாதுரியமாகப் பேசி சாதனை படைப்பீர்கள்.

**விருச்சிகம்:** செய்தொழில் மேன்மையுண்டு, உற்சாகமான நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**துலாம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கௌரவமான நாள்.

**கன்னி:** அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், சயனசுகக் குறைவான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலடி, பூம்புகார், அரியாலை

## பகுதிகளில் சட்டவிரோத மண் அகழ்வு தடுக்க அதிகாரிகள் முன்வருவார்களா?

(கொழும்புத்துறை)

நாவலடி, பூம்புகார், அரியாலை ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மண் அகழ்வு இடம் பெற்று வருவதாக அப்பிரதேச வாசிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.


அத்துடன் இச் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவோர் தமது செயற்பாடுகளை தடுக்கும் முயற்சியில் ஈடுபடுகின்ற அப்பிரதேசங்களின் கிராம சேவையாளர்கள் மற்றும் அப்பிரதேச வாசிகளை அச்சுறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மண் அகழ்வினால் மேற்படி பிரதேசங்களில் மண்ணரிப்பு ஏற்படுவதாகவும் இதன் காரணமாக இப் பிரதேசங்களுக்கு கடல்நீர் செல்லக்கூடிய நிலைமை காணப்படுவதாகவும் மக்களால் அச்சம் வெளியிடப்படுகிறது.

குறிப்பிட்ட பிரதேசங்களை பாதுகாக்க வேண்டிய முக்கிய பொறுப்புக்களில் உள்ளவர்களின் துண்டுதலாலேயே மேற்படி மண் அகழ்வு இடம்பெறுகின்றது என அப்பிரதேச மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பல தடவை உரிய அதிகாரிகளிடம் மேற்படி பிரதேச மக்களால் கோரிக்கை விடப்பட்டும் இதுவரை காலமும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, இச்சட்டவிரோத செயலில் ஈடுபடுவோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என மேற்படி பிரதேசங்களில் உள்ள மக்கள் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-51)




## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு திறப்பு விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மேற்படி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் ஈ.சரவணபவன், வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர், இ.இரவீந்திரன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.ஆர்.யூட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வலி மேற்கு பிரதேசசபை தவிசாளர் திருமதி.நா.ஜங்கரன், சங்கானை பிரதேச செயலாளர் ஏ.சோதிநாதன், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)

# தமிழ்மக்களின் கலாசாரம் திட்டமிட்டரீதியில் சிதைக்கப்படுகிறது

### வலி-வடக்கு பிரதேசசபை உப தவிசாளர் சுட்டிக்காட்டு

நாட்டில் நடைபெற்ற யுத்தத்தினால் கணவனை இழந்த பெண்களின் கஷ்டங்களினை நீக்க மறுவாழ்வுத்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டியுள்ளது என வலி.வடக்கு பிரதேச சபையின் உப தவிசாளர் எஸ்.சஜீவன் தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கு ஞானவைரவர் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்மாதம் போரிலே படுகொலை செய்யப்பட்ட ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் நினைவுகளை அனுஷ்டிக்க விடாமல் இராணுவத்தினர் தடுத்துள்ளனர்.

அரசாங்கம் திட்டமிட்ட ரீதியில் எங்களை அழித்து வருகிறது. குறிப்பாக வலி.வடக்கின் 6ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் உட்பட வடக்கு கிழக்கில் காணிகள் அபகரிக்கப்படுகிறது. கலாசாரம் திட்டமிட்டரீதியில் சிதைக்கப்படுகிறது.

பாடசாலைக்கு முன்பாக போதை மருந்துகள் விற்பனை புதிதாக மதுபானசாலை ஆரம்பிக்கப்பட்டு இளைஞர்களை அதன் அடிமைகளாக மாற்றுவதற்கான வேலைகள் நடைபெறுகிறது.

தமிழ் மக்களின் சொத்தான கல்வியை சிதைப்பதற்கான வேலைகள் அரங்கேறுகிறது. பெற்றோர்கள்தங்கள் பிள்ளைகளை பாடசாலையிலிருந்து வீடு திரும்பிய பின் என்ன செய்கிறார்கள் என்று கவனிக்க வேண்டும்.

உங்கள் பிள்ளைகள் பயன்படுத்துகின்ற கையடக்கதொலைபேசியினால்பலபிரச்சினைகள் உருவாகிறது.

இவ்விடயத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகளை கவனிக்கவேண்டும்.

இந்த திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கையை தடுத்து இதிலிருந்து எங்கள் இனத்தை காப்பாற்ற வேண்டிய தேவை இருக்கிறது.

இவ்விடயத்தில் அனைவரும் ஒன்றிணைந்து ஒத்தாசையாக செயற்பட முன்வரவேண்டும் அதே போன்று இங்கு உள்ள இளைஞர்கள் விளையாட்டில் மட்டும் நின்றுவிடாது சமூக சேவைகளிலும் ஈடுபடவேண்டும் எங்களுடைய மக்கள் பலர் யுத்தத்தால் பல பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர். அவர்களை மீட்டு எடுக்க வேண்டிய பொறுப்பு உங்களிடம் இருக்கிறது.

வன்னியில்நடைபெற்றயுத்தத்தின் பின் மீண்டு வந்த மக்களுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கவில்லை. கணவனை இழந்த பல பெண்கள் வாழ்வாதார பிரச்சினையை எதிர்நோக்குகிறார்கள். இவர்களுக்கு மறுவாழ்வு திட்டம்ஆரம்பிக்கப்பட வேண்டியுள்ளது.

இதற்கு உதாரணமாக முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டு கை,கால் இயங்காதவர்கள் மாதாந்த கொடுப்பனவான ஒன்றை நான் ஏற்பாடு செய்துள்ளேன். தேவை உடையோர் என்னுடன் தொடர்பு கொண்டு உதவியைப் பெற்றுக்கொள்ளலாம் என அவர் தெரிவித்தார். (2-4)

## திருவிழிப்பு ஆராதனை


(யாழ்ப்பாணம்)

தூய ஆவியார் திருவிழிப்பு ஆராதனை நாளை மறுதினம் இரவு 7மணி முதல் அதிகாலை 4 மணி வரை யாழ்.புனித மடுத்தீனார் குருமட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதன் ஆயத்த வழிபாடுகள் நேற்றும் இன்றும் நாளையும் மாலை 4.30 மணி முதல் பிற்பகல் 6 மணி வரை யாழ்.இறைதியான இல்லத்தில் நடைபெறும்.

நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஆயத்த வழிபாட்டிலும் திருவிழிப்பு ஆராதனையிலும் கொழும்பு உயிர்த்த ஆண்டவர் சமூகத்தின் சகோ.லலித்பெரேரா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ)










தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கொமர்ஷல் வங்கியின் அருணலு விருது வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளையில் இடம்பெற்றது. இதில் யாழ்.மத்திய கல்லூரியின் அதிபர் கே.எழில்வேந்தன், வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் த. தேவராஜன் ஆகியோர் மாணவர்களுக்கு விருது வழங்குவதையும் விருதுகள் பெற்ற மாணவர்களுடன் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.ஆர்.சுரன்)

### வடமராட்சி கடற்பரப்பில்

# கடலட்டை, கடல்சங்கு தொழிலில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள்

## தடுத்து நிறுத்துமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியை நோக்கி தென்னிலங்கை கடற்றொழிலாளர்களின் வருகை மீண்டும் அதிகரித்துள்ளதாக வடமராட்சி கிழக்கு கடல் றொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி தென்னிலங்கை கடற்றொழிலாளர்கள் வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடலட்டை, கடல் சங்கு பிடித்தல் போன்ற கடற்றொழிலில் ஈடுபட வேண்டாம் என கடற்றொழில் சங்கத்தினால் அண்மையில் அறிவிப்பு விடுக்கப்பட்டது.

ஆனால் அவர்களது கடற்றொழில் நோக்கம் வடமராட்சி கிழக்கு கடல் பகுதியாகவே காணப்படுகின்றது.

அத்துடன் இவர்களது தொழில் நடவடிக்கைகள் இரவு, பகல் பாராமல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கமைய பகல் வேளைகளில் வடமராட்சி கிழக்கு பகுதிகளான கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, ஆழியவளை, உடுத்துறை, தாழையடி ஆகிய பகுதிகளில் தமது தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலைமை கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து காணப்படுவதாக வடமராட்சி கடற்றொழிலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனைவிட டைனமைட், தங்கூசி, கணவாய்க்குழை போன்ற சட்ட விரோத செயல்களின் ஊடாகவும் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது இங்குள்ள கடற்றொழிலாளர்கள் தொழில் நடவடிக்கைக்கு சென்று எந்த வித மீன் வகைகளையும் பிடிக்காத நிலையில் கரை திரும்பும் நிலை தோன்றியுள்ளது.

எனவே தென்னிலங்கை கடற்றொழிலாளர்கள் வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடலட்டை, கடல்சங்கு போன்ற கடற்றொழிலில் ஈடுபடுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என வட மராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் கடற்றொழில்த்துறை அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ். பயணிக்க இருந்த 13 இளைஞர்கள் கைது

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

மொரட்டுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லுனாவ பிரதேச விடுதியொன்றிலிருந்து வட மாகாணத்தைச் சேர்ந்த 13 இளைஞர்களை பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் ரோந்து நடவடிக் கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாராலேயே மேற்படி 13 பேரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள், நெடுங்கேணி, முள்ளியவளை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவு னியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரொருவர், மேற்படி இளைஞர்களை அவுஸ்திரேலியாவு க்கு அனுப்புவதாகக் கூறி தலா ஒரு தொகைப் பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

அவ்விளைஞர்களை மொரட்டுவையிலி ருந்து படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்புவதாக அவர் உறுதியளித்த நிலை யிலேயே தாங்கள் இப்பகுதிக்கு வந்து குறித்த விடுதியில் தங்கியிருந்ததாகவும் கைது செய்யப்பட்ட இளைஞர்கள், பொலிஸாரிடம் கூறியுள்ளனர்.

இவர்களிடம் பொலிஸார் தொடர்ந்து விசா ரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார். (2)

# கொழும்புத்துறையில் திருடர்களின் நடமாட்டத்தால் மக்கள் அச்சம்

## பொலிஸ் நிலையத்தில் முறையீடு

யாழில் சில பிரதேசங்களில் திருட்டுச்சம் பவம் இடம்பெற்று வருவதாக பொதுமக்க ளால் அச்சம் வெளியிடப்படுகிறது.

கொழும்புத்துறை விபுலானந்தர் வீதி, ஆனந்தன் வடலி வீதி, விதானையார் வீதி போன்ற பகுதிகளிலே திருடர்களின் தொல்லை தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக தெரி விக்கப்படுகிறது.

குறிப்பாக இரவு வேளைகளிலேயே திருடர் கள் தமது கைவரிசையை காட்டுவதாகவும் இத்திருட்டுகளின் போது துவிச்சக்கரவண்டி, நீர்ப்பம்பி(மோட்டார்) கால்நடைகள் என்பவை தொடர்ச்சியாக திருடப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக குறித்த பகுதிகளில் உள்ளமக்கள்கடந்தசில தினங்களுக்கு முன் னர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்துள்ளனர்.

அத்துடன் குறி த்த பகுதிகளில் இரவு வேளைகளில் பொலி ஸார் ரோந்து நடவ டிக்கைகளில் ஈடுபட் டால் திருட்டுச் சம்பவ ங்கள் இடம்பெறாது தடுக்கலாம் என அப் பகுதிகளில் உள்ளமக் கள் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு கோரிக்கை விடுத்து ள்ளனர். (2-51)

# போசணைகளை அதிகரிக்கும் திட்டங்களுக்கு நிதியொதுக்கீடு

நாட்டில் 20 தொடக்கம் 30 சதவீதத்தினர் மந்தபோசணைக்கு உள்ளாகியுள்ளனர். இத்தகைய நிலைமைக்கு போசாக்கு மிக்க உணவுகள் உட்கொள்ளாமையே பிரதான காரணமாகும்.

மேலும். இதன் காரணமாக இரும்புச்ச த்து குறைவடைந்து குருதிச் சோகை ஏற்ப டுவதுடன் நீரிழிவு நோய்க்கு அடித்தளமிடு கிறது என குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய நோய்கள் தொடர்பான கொழும்பு பல்கலைக் கழக மருத்துவ பீட பேராசிரியர் சுஜித விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குழந்தைகளின் போசணை தொடர்பில் நேற்று முன்தினம் சுகாதார கல்விப் பணிய கத்தில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில்,

இதேவேளை, மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு போசாக்குமிக்க உணவுகள் மிகவும் அவசியம். இதற்கமைய பாடசாலை களில் மாணவர்களின் போசணைகளை அதிகரிக்க விசேட செயற்றிட்டங்கள் பாட சாலை மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

இந்நிலையில் இத்திட்டத்திற்காக அரசு 3ஆயிரத்து 250 மில்லியன்ரூபா ஒதுக்கீடு செய்த தாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (2)

# அரசாங்கம் பணத்தை விரயமாக்குகின்றது

## சஜித் எம்.பி.தெரிவிப்பு

அரசாங்கம் பாரியளவில் பணத்தை விரயமாக்கி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

எனினும், விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப் படவில்லை. அரசாங்கம் விவசாயிகளுக்கு உரமானியம் வழங்குகின்றது. இவ்வாறு மானியமாக வழங் கப்படும் உர வகை கள் தரத்தில் குறைந் தவை. விவசாயி களை மேம்படுத்த வேண்டுமாயின் தர மான உரங்களை வழங்க வேண்டும்.

வீண் விரயமாக செலவிடுவதனை தவி ர்த்து நாட்டின் விவசாயி களின் நலன்களை உறுதி செய்ய அரசா ங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித் துள்ளார். (2)




# நினைவு தினமும் பேருரையும்

முன்னாள் உடுவில் கோட்டக்கல்வி பணிப்பாளரும் அதிபருமான அமரர் அப்புத்துரை தற்பரானந்தனின் நினைவு தினமும் நினைவு பேருரையும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை மண்டபத்தில் வித்தியாசாலை அதி பர் கா.சசிதரன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்டக்கல்வி பணிப்பாளர் தி.தர்ம லிங்கம், பழைய மாணவர் க.பாலேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். இவ்விழாவில் நினைவுப் பேருரை யினை யாழ்.பல்க லைக்கழக சங்கீதத் துறை நுண்கலைப் பீடத் தலைவர் கலா நிதி ஸ்ரீ.தர்ஷனன் நிக ழ்த்துவார். (2)

## நிரந்தர தொழில்வாய்ப்புகள்

தரம் 6 முதல் O/L, A/L கல்வியுள்ள/ அற்ற அனைவருக்கும் நிரந் திர தொழில்வாய்ப்புகள். சம்பளம் 19000/=, 25000/=, 35000/= உணவு+ தங்குமிடம் சகாய விலைகளில். கொழும்பை அண்மித்த பிரதேசங் களில் நவீன தொழிற்சாலைகளான ஜேம்/தேங்காய் பால்மா/ கிள வுஸ்/ பொலித்தீன்/ தேயிலை/ குளிர்பானம்/ சொலட்/ பிஸ்கட்... மற்றும் பல தொழிற்சாலைகளுக்கு +பொதியிடல் +லேபல் +உற்பத்தி +களஞ்சிய பிரிவு 18-50 வயது ஆண்-பெண் தேவை. வருகை தரும் நாளிலே வேலை வாய்ப்பு. (நண்பர்கள்/ குழு/ தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்)
மேலதிக விபரங்களுக்கு. தொடர்பு:-0775561883
(சி-7557)

## குறைந்த விலையில் உன்னதமான பயணம்



உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச்சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். *Conditions apply

ஹேலீஸ் டிரவல்ஸ் & டூர்ஸ்
உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!

யாழ்ப்பாணக்கிளை: 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818
Skyline

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 29.75 சூரி செவ் 5 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: Management - Part II / Business<br>தொ.இ: B/1471 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா: 63.75 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: BSc / ஆசிரியர்<br>தொ.இ: G/2074 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 49 சூரி செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc / ஆசிரியர்<br>தொ.இ: B/1473 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 11.5 சூரி செவ் 10 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: College of Education / ஆசிரியர்<br>தொ.இ: G/2077 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 31.25<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L / Restaurant Owner (கனடா- சிற்றிசன்)<br>தொ.இ: B/1478 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 6.25 சூரி செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MD – Following (வைத்தியர்)<br>தொ.இ: G/2080 |
| பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 48 சூரி செவ் 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L / சொந்த வான்<br>தொ.இ: B/1484 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 27.5<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: CIMA, BIT / கணக்காளர்<br>தொ.இ: G/2084 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்தங்களால் உயிரிழந்த குடும்பங்களுக்கு நிதியுதவி

## ஜனாதிபதி மஹிந்த பணிப்பு

(கொழும்பு)

கடும் மழை, வெள்ளம் உட் பட இயற்கை அனர்த்தங்களினால் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவார ணங்களை வழங்க துரித நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்குப் பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

பாதக்கப்பட்டவர்கள் தொடர்பான விபரங்களைப் பெற்றுக்கொண்டு அவர்களின் குடும்பங்களுக்கு உணவு, உடை மற்றும் நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடு க்குமாறு பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதி விசேட பணிப்புரைகள்ளை வழங்கியுள்ளார்.

அத்துடன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அதிகாரிகளுக்கும் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைப் பெற்றுக் கொடுக்குமாறும் அவர் பணித்துள்ளார்.

இது தொடர்பில்சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் இது பற்றிய பணிப்புரையையும் வழிகாட்டல்களையும் நேற்று முன்தினம் வழங்கியுள்ள ஜனாதிபதி, இயற்கை அனர்த்தங்களி னால் மரணமடைந்தவர்களின் இறுதிச் சடங்குகளை மேற்கொள்வத ற்கான நிதியினைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் அந்தந்த பிரதேசங்களிலுள்ள மக்கள் பிரதிநிதிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று மக்களின் நிலைமைகளைப் பார்வையிட்டு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார். (2)

# சிற்பக் கூடத்தை பார்வையிடலாம்

(கொழும்புத்துறை)

திருமறைக்கலாமன்றமூத்த கலைஞரும் பிரபல சிற்பக்கலைஞருமான ஏ.வி. ஆனந்தனின் நினைவு தினம் அண்மையில் மல்லாகத்தில் உள்ள சிற்ப கூடத்தில் நடைபெற்றது.

இதில் சுனாமி சிற்பம் உட்பட நூறுக்கு மேற்பட்ட பலவகையான சிற்பங்கள் மேற்படி சிற்ப கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டன.

இவற்றை பொதுமக்கள் தொடர்ந்து பார்வையிட முடியும் என சிற்பக் கூடத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ளஅனைவரையும்இதனை பார்வையிட்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2-51)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வ்கைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 240 | 180 | 250 |
| தக்காளி | 140 | 160 | 170 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 140 | 100 | 120 |
| கரட் | 120 | 120 | 140 |
| பூசணி | 60 | 90 | 60 |
| புடோல் | 60 | 80 | 70 |
| வாழைக்காய் | 50 | 50 | 35 |
| சின்ன வெங்காயம் | 110 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 90 |
| பாகற்காய் | 200 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 70 |
| கருணைக் கிழங்கு | – | 60 | 60 |
| பயற்றங்காய் | 140 | 180 | 130 |
| லீக்ஸ் | 80 | 80 | 70 |
| பீற்றூட் | 80 | 80 | 90 |
| கறிமிளகாய் | 180 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 |
| போஞ்சி | 160 | 180 | 140 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 25 |
| தேசிக்காய் | 120 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-50 | 30 | 30 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 |

# சுகாதாரக்கல்வி மாணவர்களின் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படவில்லை- ஐ.தே.க. தலைவர் தெரிவிப்பு

உயர்கல்வி அமைச்சர் நாடாளுமன்றை பிழையாக வழிநடத்தி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில்நேற்று முன்தினம் மாணவர்களை சந்தித்த போது அவர்மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

சுகாதார கல்வி மாணவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் நாடாளுமன்றில் அறிவித்துள்ளார். எனினும், இந்தப் பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை.

மாணவர்களின் பிரச்சினைகளுக்கு மாணவர்களின் பிரசன்னம் இல்லாமல் தீர்வு காண முடியாது.


இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதனை தவிர்த்து ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை குற்றம் சுமத்தி கால நேரத்தை விரயமாக்கி வருகின்றனர்.

பிரச்சினைகளை எதிர்நோக்கி வரும் மாணவர்களை அழைத்து பேசாமல் ஜனாதிபதி வேறு நபர்களுடன் பேசி தீர்வு வழங்கியுள்ளார்.

மாணவர்களை இணைத்துக் கொண்டு பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (2)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 35

அஜந் குலசிங்கம்




தாரணி புவனேஸ்வரன்



கிரிசாந் சிவராஜா




அஜன் நிரோஜன்




கல்யாண திருவிழா




சஞ்சீவ் ரோக்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா

கிளி/ பூநகரி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று மு.ப 9 மணியளவில் கல்லூரிமுதல்வர் இ.பாலச்சந்திரன் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா, விசேட விருந்தினராக கிளி.வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், பூநகரிக் கோட்ட கல்வி அலுவலர் எஸ்.தருமரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள். (9-84)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராமநாதபுரம் புதுக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த சங்கீதா சர்வநாபன் (826874236V) என்பவருடையதேசிய அடையாளஅட்டைகண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரத்தைக் காட்டி வலம்புரி காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும். (9)

# உருத்திரபுரம் பொதுச் சந்தை நடைமுறைகளை சீராக்குக

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச சபையின் கீழுள்ள உருத்திரபுரம் பொதுச் சந்தை நடவடிக்கைகளை சீராக மேற்கொள்ள பிரதேச சபையினர் உதவ வேண்டுமென வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

உருத்திரபுரம் பொதுச் சந்தை யுத்தத்தினால் சேதமடைந்திருந்த நிலையில் வாழ்வாதார உட்கட்டுமான திட்டத்தின் கீழ் உலக தரிசன நிறுவனத்தின் அனுசரணையுடன் புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு கரைச்சி பிரதேச சபையிடம் கையளித்திருந்தது.

இக்கட்டடம் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் மக்கள் பாவனைக்காக விடப்பட்டது. இங்கு மீன், இறைச்சி, மரக்கறி வியாபாரங்களுக்குரிய இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.எனினும் ஓரிரு பெண் மரக்கறி வியாபாரிகள் மத்திரமே ஒதுக்கப்பட்டுள்ள மரக்கறி கடைத் தொகுதியில் வியாபாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

ஏனைய வியாபாரிகள் சந்தையின் வெளிப்பகுதியில் வைத்து மரக்கறி வியாபாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இதனால் ஏனைய மரக்கறி வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு சந்தையின் ஒரு கிலோ மீற்றருக்குட்பட்ட பகுதிகளில் மரக்கறி வியாபாரம் தடை செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அது நடைமுறையில் இல்லையென வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறாக வெளியாலுள்ள ஏனைய கடைகளில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுவதாலும் சக வியாபாரிகள் ஒதுக்கப்பட்ட இடங்களில் மரக்கறி வியாபாரத்தை மேற்கொள்ளாமையாலும் ஏனைய வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே கரைச்சிப் பிரதேச சபையினர் மேற்படி பிரச்சினைகள் தொடர்பாக வியாபாரிகளோடு கலந்தாலோசித்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட வியாபாரிகள் வலியுறுத்தியுள்ளனர். (9-254)

## விபத்துக்கள்

(மல்லாவி)

கொழும்பிலிருந்து பளை நோக்கி புறப்பட்ட குளிரூட்டப்பட்ட புகையிரதம் நேற்று முன்தினம் இரவு விபத்துக்குள்ளானது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த புகையிரதம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் திருமுறிகண்டியை கடந்து சென்று கொண்டிருந்த வேளை புகையிரத பாதையைக் கடக்க முற்பட்ட டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இவ்விபத்தில் டிப்பர் வாகனம் பலத்த சேதமடைந்ததோடு சாரதி படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு பேருந்து சேவையை இடை நிறுத்தியதனால் பயணிகள் பல மணிநேரம் காத்திருந்த பின்னர் பேருந்துகளில் பயணத்தைத் தொடர்ந்தனர்.

விபத்துக்குள்ளான பேருந்து நேற்றைய தினம் திருத்தம் செய்வதற்காக கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

குறித்த புகையிரதம் கடந்த மாதம் மாங்குளம் 228 ஆவது கிலோ மீற்றர் பகுதியில் யானையுடன் மோதி விபத்துக்களாகியமை குறிப்பிடத்தக்கது. (9-15)

★ ★ ★ ★ ★

(கனகபுரம்)

ஆனையிறவு பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சியிலிருந்து பளை நோக்கி மோட்டார் சைக்கிளில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை, மகள் ஆகியோர் பயணம் செய்துள்ளனர்.

இந்நிலையில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியது. இவ்விபத்தில் வே. பாஸ்கரன் (வயது- 45), பா. நிதர்ஷனா (வயது -4) இருவரும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (9-259)

★ ★ ★ ★ ★

(குருமன்காடு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற அம்புலன்ஸ் வண்டி விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு கடந்த திங்கட்கிழமை இரவு நோயாளிகளை ஏற்றிக் கொண்டு யாழ். வைத்தியசாலையில் அனுமதித்து விட்டு மீண்டும் முல்லைத்தீவுக்கு வரும் போதே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் பயணித்த சாரதி, உதவியாளர், தாதி உட்பட மூவர் படுகாயமடைந்த நிலையில் மாஞ்சோலை, வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (9-250)

# ஒட்டுசுட்டானில் 738 புதிய வீடுகள் வழங்க திட்டம்

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்டவர்களுக்கு மேலும் 738 வீடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பிரதிச் செயலர் எஸ்.குருபரன் தெரிவித்துள்ளார்.இப் பிரதேசத்தில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் ஆயிரத்து 648 புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்தோடு இந்தியன் வீட்டுத் திட்டத்தினூடாக கற்சிலைமடுவில் 140 வீடுகளும் பழம்பாசியில் 150 வீடுகளும் ஒட்டுசுட்டானில் 51 வீடுகளும் மணவாளன் பட்டமுறிப்பில் 80 வீடுகளும் முத்தையன் கட்டில் 91 வீடுகளும் அம்பகாமத்தில் 58 வீடுகளும் இந்துபுரம் திருமுறிகண்டியில் 127வீடுகளும் காதலியார் சம்மணங்குளத்தில் 143 வீடுகளுமாக மொத்தம் 419 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்தியன் வீட்டுத் திட்டத்தில் கருவேலங்கண்டலில் 45, முத்து விநாயகபுரத்தில் 35, திருமுறிக ண்டியில் 164, பனிக்கன் குளத்தில் 30, மாங்குளத்தில் 139, ஒலுமடுவில் 60, வித்தியாபுரத்தில் 146, தட்டயமலையில் 57, கனகரட்ணபுரத்தில் 62 வீடுகள் அமைக்கப்படுவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (9-15)

# விவசாய செய்கையை மேம்படுத்த 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

மன்னார் மாவட்டத்தில் உள்ள குளங்கள் மற்றும் வாய்க்கால்களை புனரமைப்பதற்கு அரசாங்கம 50 மில்லியன் ரூபாயினை வழங்கியிருப்பதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இம் மாவட்டத்தில் விவசாய செய்கைக்கு பெரிதும் பயன்படுத்தப்பட்டு வரும் கட்டுக்கரை குளத்தின் கீழான சிறுகுளங்கள் மற்றும் வாய்க்கால்கள் என்பவற்றின் புனரமைப்பு தொடர்பில் ஜனாதிபதியின கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் மாவட்டத்தின் விவசாய செய்கையினை மேம்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி, மாவட்டச் செயலகத்திற்கு சுமார் 50 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியிருப்பதாகவும் அவர்மேலும் குறிப்பிட்டுள்ளார். (9-250)




## மாவட்ட அதிகாரிகள் நேற்று நியமனம்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணம் , கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் புதிய மாவட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட அதிகாரியாக கடமையாற்றிய இ.பரராஜசேகரம் யாழ் மாவட்ட அதிகாரியாகவும், முல்லைத்தீவு மாவட்ட அதிகாரியாக கடமையாற்றிய எஸ்.பஞ்சலிங்கம் கிளிநொச்சி மாவட்ட அதிகாரியாகவும் நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முதலாம் வகுப்பு அதிகாரிகளான இவர்கள் சேவை மூப்பு , திறமை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளதுடன் யாழ் மாவட்ட அதிகாரியாக கடமையாற்றிய திருமதி நவமணி ஜெயராஜா ஓய்வு பெற்றதனை தொடர்ந்தே இந்த இட மாற்றங்கள் நடைமுறைக்கு இடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பொருத்தமான மாவட்ட அலுவலர மிக விரைவில் நியமிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (9-254)

# வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய திருவிழாவை முன்னிட்டு கலந்துரையாடல்



(முல்லைத்தீவு)

வரலாற்று பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நடைபெறவுள்ள நிலையில் உற்சவத்துக்கான முன்னேற்பாடுகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் முன்னேற்பாட்டு கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, போக்குவரத்து, மின்சாரம், குடிநீர், மலசலகூடம், பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் முக்கிய [illegible] செலுத் தப்பட்டு அவை [illegible] துறை சார்ந்தோரிடம் கேட்டறியப்பட்டது.

அத்தோடு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இக்கோவிலுக்கு வருகைதரவுள்ள நிலையில் அவர்களது போக்குவரத்தை இலகுவாக்கும் வகையில் முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இதில் விசேடமாக ஆலய அறங்காவலர் சபையினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்பட்டு அதற்கேற்ற வகையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அரச திணைக்களத்தின் [illegible] தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ், மேலதிக அரசாங்க அதிபர் மோகன்ராஜ், வற்றாப்பளை அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் குகதாசன், ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் கனகரத்தினம், ஈ.பி.டி.பி முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜ், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்துகொண்டனர். (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

825



## சின்னானும் சிட்டுக்குருவிகளும்!

சின்னானுக்கு ஒரு நூதனமான பிரச்சினை. அவரும் மனைவியும் சலவைத் தொழிலாளர்கள். கொஞ்சநாட்களாக அவர்கள் துவைத்துக் காயப்போடும் துணிகளைச் சிட்டுக்குருவிகள் அசுத்தம் செய்துவிட்டுச் சென்றுவிடுகின்றன. சின்னான் முதலில் இதை தற்செயல் என்று நினைத்தார்.

ஆனால் அடுத்தடுத்த நாட்களிலும் இது போன்றே நடந்தது. மற்றத் தொழிலாளர்களும் இதே படித்துறையில்தான் துணிகளை வெளுக்கிறார்கள். குருவிகள் அந்த துணிகளை அண்டவில்லை. சின்னாவின் துணிகள் மீது மட்டுமே அவை எச்சம் இட்டுச் சென்றன. இதனால் துணிகளை மீண்டும் அலசிக் காயப்போடுவது மிகுந்த ரோதனையாகப் போய்விட்டது. இது ஏதோ சாமி குத்தம் மாதிரித் தெரியுது என்றார்கள் நண்பர்கள். சின்னான் வசிக்கும் ஊரில் சாமியார் ஒருவர் இருந்தார். நல்ல மனிதர். ஊர் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்வார். சின்னான் தனது குடும்பத்துடன் சென்று விடயத்தை சொன்னார். சாமியார் சின்னானை உற்றுப் பார்த்தார். சின்னான் தவறு செய்பவர்போன்று தெரியவில்லை. வெள்ளந்தியாகத்தான் தெரிந்தார். அடுத்து சின்னான் மனைவியிடம் பேசினார். அவர்களை சற்று எட்டத்தில் இருக்கச்சொல்லிவிட்டு சின்னானின் மகன் ஆறுமுகத்திடம் பேச்சுக்கொடுத்தார்.

நீ என்ன படிக்கிறே?

நாலாவது படிச்சேன். இப்போ ஸ்கூலுக்கு போகலை. நம்மளை மாதிரி ஏழைகளுக்கு படிப்பு எதுக்கு? நீ படிச்சது போதும் வீட்டுலே இரு,னு அய்யா சொல்லிட்டாரு என்றான் ஆறுமுகம்.

உனக்கு படிக்க ஆசையா? இல்லையா?

ஆசைதான். ஆனா அய்யா விடனுமே? என்றான் ஆறுமுகம்.

நான் அனுப்பச்சொல்றேன். என்று சாமியார் சொல்ல சரி என்று தலையாட்டிய ஆறுமுகம் நான் ஸ்கூலுக்குப் போயிட்டா சிட்டுக் குருவி என்ன செய்யும் என்றான். எந்தச் சிட்டுக்குருவி எனச் சாமியார் ஆச்சர்யத்தில் நிமிர்ந்தார். எங்க வீட்டுக்கூரைக் கொட்டகையில் சிட்டுக்குருவி ஒண்ணு கூடு கட்டியிருக்கு. தினமும் அய்யாவும் அம்மாவும் வேலைக்குப் போனதும் அது கீழே இறங்கி வரும். கொஞ்ச நேரம் என் கூட விளையாடிட்டு வெளியே போகும். நான் ஸ்கூலுக்குப் போயிட்டா அது என்னைத் தேடுமே என்றான் ஆறுமுகம்.

குருவி உன்னைப் பார்த்துப் பயப்படாதா? என சாமியார் கேட்டார்.

பயப்படாது. குருவியும் நானும் ஃப்ரெண்ட்ஸ் என்றான் ஆறுமுகம்.

சாமியார் யோசித்தார். அங்கேயும் குருவி இங்கேயும் குருவி. அங்கே சின்னான் தொழிலுக்கு குருவிகள் இடைஞ்சல் தருகின்றன. இங்கே ஒரு குருவி சிறுவன் ஆறுமுகத்தோடு நட்பாக இருக்கிறது. இரண்டும் வெவ்வேறு இடங்களிலும் நிகழும் சம்பவங்கள். இருந்தாலும் சிட்டுக்குருவிகளின் செயலை ஒரு அமானுஷ்ய நிகழ்வாக ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது?

சிட்டுக்குருவிகள் சுதந்திரத்தின் அடையாளமாக அறியப்படும் ஒரு பறவை. சுறுசுறுப்பாக இருக்கும்.

சிறார்களை சிட்டுக் குருவிகள் போன்று ஆடிப்பாடித் திரிகிறார்கள் என்பார்கள். படிக்க வேண்டிய வயதில் பள்ளிக்கூடம் செல்வதுதான் சிறுவர்களுக்கு உண்மையான சுதந்திரம். எனவே ஆறுமுகத்தை மீண்டும் பள்ளிக்கூடம் அனுப்புவதில் உறுதியாக இருந்தார் சாமியார்.

சின்னானையும் அவர் மனைவியையும் அருகே வரச் சொன்னார். நீங்க உங்க பையனைப் பள்ளிக்கூட அனுப்பி வையுங்க உங்க பிரச்சினை தீரும் என்றார்.

என்ன சாமி சொல்றீங்க. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்ட மாதிரி? என்று சின்னான் ஏதோ பேச வாயெடுத்தார். நான் சொல்லுறதை மட்டும் செய்ங்க எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று சொல்லி சாமியார் அவர்களை அனுப்பிவிட்டார். இந்தப் பிரச்சினைக்கு இதுவே சரியான தீர்வு என்று சாமியார் நம்பினார். சாமியாரின் கட்டளைக்கு பணிந்து சின்னான் ஆறுமுகத்தை மீண்டும் பள்ளிக்கு அனுப்பி வைத்தார். அதன்பிறகு சின்னான் துணிகளை இராண்டாவதுமுறை வெளுக்க வேண்டிய அவசியம் ஏற்படுவதேயில்லை.



## 06.2014 05 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1864- அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியாவின் பியெட்மொண்ட் நகரில் இடம்பெற்ற போரில் அமெரிக்கப் படைகள் கூட்டமைப்புப் படைகளைத் தோற்கடித்து கிட்டத்தட்ட 1,000 பேரை சிறைப்பிடித்தனர்.
- 1900- இரண்டாம் போவர் போர்: பிரித்தானியர் தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியாவைக் கைப்பற்றினர்.
- 1912- ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையினர் கியூபாவில் இறங்கினர்.
- 1956- இலங்கையில் சிங்களம் மட்டும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
- 1959- சிங்கப்பூரின் முதலாவது அரசு பதவியேற்றது.
- 1967- இஸ்ரேலிய வான்படையினர் எகிப்து, ஜோர்தான், சிரியா ஆகியவற்றின் மீது தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1968- ஐக்கிய அமெரிக்காவின் அரசுத் தலைவருக்கான வேட்பாளர் றொபேர்ட் கென்னடி பாலஸ்தீனர் ஒருவரால் சுடப்பட்டார். இவர் அடுத்தநாள் உயிரிழந்தார்.
- 1969-அனைத்துலக கம்யூனிஸ்டுகளின் மாநாடு மொஸ்கோவில் ஆரம்பமானது.
- 1974- ஈழப்போர்: சிவகுமாரன் உரும்பிராயில் காவற்துறையினர் சுற்றி வளைத்தபோது சயனைட் அருந்தி மரணமடைந்தார். இவர் ஈழப்போரல் முதன்முதலில் சயனைட் அருந்தி வீரச்சாவையடைந்தவர்.
- 1977- செஷெல்சில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- 1977 - முதலாவது தனிக்கணினி அப்பிள் II விற்பனைக்கு விடப்பட்டது.
- 1979 - இலங்கையின் சுயாதீன தொலைக்காட்சி அரசுடைமை ஆக்கப்பட்டது.
- 1984 - இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி சீக்கியர்களின பொற்கோயிலில் தாக்குதல் நடத்த உத்தரவிட்டார்.

### பிறப்புகள்

- 1898 - ஃவெடரிக்கோ கார்சியா லோர்க்கா, ஸ்பானிய எழுத்தாளர் (இ. 1936)
- 1925 - வ. அ. இராசரத்தினம், ஈழத்து எழுத்தாளர்.
- 1975 - சிட்ருனாஸ் இல்கவுச்காஸ், லித்துவேனிய கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1910 - ஓ ஹென்றி, அமெரிக்க எழுத்தாளர் (பி. 1862)
- 1958 - ரெங்கநாதன் சீனிவாசன், மொறிசியஸ் அரசியல்வாதி (பி. 1910)
- 1974 - சிவகுமாரன், சயனைட் அருந்தி உயிர் நீத்த முதலாவது ஈழப் போராளி (பி. 1950)
- 2002 - மு.சிவசிதம்பரம், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்
- 2004 - ரோனால்டு ரேகன், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி (பி. 1911)
- 2004 - கே. கணேஷ், எழுத்தாளர் (பி. 1920)

### சிறப்பு நாள்

- உலக சுற்றுச்சூழல் நாள்

### உலக சுற்றுச்சூழல் தினம்




உலக சுற்றுச்சூழல் தினம் (World Environment Day- WED) ஐக்கிய நாடுகள் அவையால் ஆண்டு தோறும் ஜூன் 5 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வரும் ஒரு முக்கிய சூழல் தொடர்பான நிகழ்வு ஆகும். இது ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச்சபையால் 1972 ஆன் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இச் சபையின் சார்பில் இத்தினத்தின் கொண்டாட்டங்களுக்குப் பொறுப்பாக ஐக்கிய நாடுகள் சூழல் திட்டம் (UNEP) செயற்படுகின்றது. உலகிலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் இது தொடர்பான நிகழ்வுகள் நடைபெற்றாலும், ஒவ்வொரு ஆண்டிலும், முதன்மைக் கொண்டாட்டத்துக்கான இடமாக ஒரு இடம் தெரிவு செய்யப்படுவ்தும் வழக்கமாக உள்ளது.

சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் கடந்த சில பத்தாண்டுகளாகவே உலகம் முழுவதிலும் உணரப்படுகின்ற ஒன்றாக இருந்து வருகின்றது. மனித நடவடிக்கைகளால் சூழலில் ஏற்பட்டுவரும் விரும்பத்தகாத மாற்றங்களும், அதனால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளும், இது தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளன. உலக சுற்றுச்சூழல் தின நிகழ்வுகளின் முக்கியமான நோக்கம, உலகம் தழுவிய அளவில் சூழலின் முக்கியத்துவம் பற்றிய உணர்வை ஏற்படுத்துவதும், அரசியல் மட்டத்தில் கவனத்தை ஈர்த்து, உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தூண்டுவதுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்



**மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்**
**விரய ஸ்தானம் வலுக்கிறது!**
**விரும்பிய பொருளை வாங்குங்கள்?**

**60/100**

**துணிவும் தன்னம்பிக்கையும் மிகுந்தால் உலகையே வெல்லலாம் என்று சொல்லும் சிம்ம இராசிநேயர்களே!**

உங்கள் இராசிக்கு இதுவரை இலாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது விரய ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கிறார். எனவே, வைகாசி 30 முதல் விரயங்கள் அதிகரிக்கப் போகிறதே என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

உங்கள் சுய ஜாதகத்தில் தன ஸ்தானத்திலுள்ள கிரகம் வலுவாக இருந்தால் பணம் உங்களுக்கு திருப்தியாக வந்துகொண்டே இருக்கும். ஆனால், வந்த மறுநிமிடமே செலவாகும் விதத்தில் விரயங்கள் காத்திருக்கும். எனவே,. இதுபோன்ற நேரங்களில் சுப விரயங்களை ஏற்படுத்திக்கொள்வது நல்லது.

என்னயிருந்தாலும் பஞ்சம ஸ்தானத்திற்கு அதிபதியான குரு 12 ஆம் இடத்திற்கு வருவது அவ்வளவு நல்லதல்ல. எதற்குமே கலங்காத உங்கள் மனம் இப்பொழுது ஏதேனும் சில பிரச்சினைகளை நினைத்து வாடும். ஆரோக்கியக் குறைபாடுகளால் அதிகத் தொல்லை ஏற்படுகிறதே என்று கவலைப்படுவீர்கள். குடும்பத்தில் அதிக குழப்பங்கள் ஏற்படாமலிக்கவும் கூடுதல் லாபம் பெறவும் கொள்கைப்பிடிப்போடு செயற்படவும் திசை மாறிய தென்முகக் கடவுள் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. 63 நாயன்மார்கள் வழிபாட்டையும் அனுகூல நாளில் செய்து வந்தால் திருப்பங்கள் வந்து சேரும்.

முல்லைப்பூ மாலை அணிவித்து சுண்டல் நைவேத்தியம் வழங்கி மஞ்சள் வஸ்திரம் சாற்றி அருகிலிருக்கும் புராதன கோவில்களுக்குச் சென்று குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள்.

**அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள்!**

தேசப்பற்றும், தெய்வப்பற்றும் மிக்கவர்களாக விளங்குவர்கள் நீங்கள். ஆசைப்பட்டவைகளை அப்பொழுதே அடைய வேண்டுமென்று விரும்புவீர்கள். எங்கு நீங்கள் வசித்தாலும் அந்தப்பகுதியிலும் உங்களைத் தெரியாதவர்கள் இருக்க மாட்டார்கள். அந்த அளவிற்கு புகழ் ஏணியின் உச்சியில் இருப்பவர்கள் நீங்கள்.

# விரய ஸ்தானம் வலுக்கிறது! விரும்பிய பொருளை வாங்குங்கள்

இளம் வயதிலேயே தனக்கென பல லட்சியங்களைக்கொண்டிருப்பீர்கள். பிடிவாத குணத்திற்குச் சொந்தக்காரர்களாக நீங்கள் விளங்கினாலும் அன்பிற்கு அடிபணிவீர்கள். எந்தக் காரியத்தில் இறங்கினாலும் வெற்றி முகத்தோடுதான் திரும்புவீர்கள்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு பெயர்ச்சியாகி வந்த குரு வளர்ச்சியைக் கொடுப்பாரா? இல்லை தளர்ச்சியைக் கொடுப்பாரா? சென்ற குருப்பெயர்ச்சியின் பொழுது செயற்படுத்த முடியாத திட்டங்களை இப்பொழுது செயற்படுத்த வழிவகுப்பாரா? என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

இடமது பன்னிரெண்டில்,
இயல்பாக குருவும் வந்தால்,
கடமையில் கவனம் தேவை!
காசுகள் விரயமாகும்!
உடமையால் சொத்து சேரும்!
உடல்நலம் அச்சுறுத்தும்!
தடம்புரளாமல் வாழத்
தைரியம் கைகொடுக்கும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு சுப விரயங்களை அதிகரிக்கச்செய்வார். கடமையில் கொஞ்சம் கண்ணும், கருத்துமாக இருப்பது நல்லது. இல்லையேல் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். பொது நலத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் வீண் பழிக்கு ஆளாக நேரிடலாம். எச்சரிக்கை தேவை.

இந்த நேரத்தில் கடன் மேல் கடன் வாங்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு ஏற்படும். உங்களுடைய பெருமையான வாழ்க்கையை பார்த்துப் பலரும் கடன்தரக் காத்திருப்பர். என்றாலும் வாங்கிய கடனைப் பிறருக்குத் திருப்பித் தர வேண்டுமல்லவா? எனவே, கொடுக்கல்- வாங்கல்களில் முன்னெச்சரிக்கை தேவை. உங்கள் இராசியைப் பொறுத்தவரை அஷ்டமாதிபதியாகவும், குரு விளங்குவதால் திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திறமைமிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து உதவிக்கரம் நீட்டுவர். வழக்குகளில் வெற்றி கிட்டும்.

**வெற்றிகளைக் குவிக்கும் வியாழனின் பார்வை!**

குருவின் பார்வை புனிதமான பார்வையாகும். அது எந்த இடத்திலிருந்தாலும் அதைப் பற்றிக் கவலை இல்லை. அது பார்க்குமிடத்திற்கு பலன்கள் அதிகமுண்டு. அந்த அடிப்படையில் பார்த்தால் தற்சமயம் பெயர்ச்சியாக இருக்கும் உச்ச குரு 4,6,8 ஆகிய இடங்களைப் பார்த்து புனிதப்படுத்துகிறார்.

நான்கினைக் குருதான் பார்த்தால்,
நல்லதோர் கல்வி வாய்க்கும்!
ஆறினைக் குருதான் பார்த்தால்,
ஆதரவுக் கரங்கள் கூடும்!
எட்டினைக் குருதான் பார்த்தால்,
இழப்பினை ஈடு செய்வீர்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

## சிம்மம்



அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது சுகம், தாய், வீடு, வாகனம் ஆகியவற்றை குரு பார்ப்பதால் வீடு கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வியக்கும் தகவல் வந்துகொண்டேயிருக்கும். தாயின் உடல்நலம் தேறும். தக்கவிதத்தில் சுகங்களும், சந்தோஷங்களும் வந்துசேரும். கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். பயணங்கள் அதிகரிக்கும். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்களை வாங்க முன்வருவீர்கள். பூர்வீக சொத்துக்களை ஒருபகுதியைக் கொடுத்துவிட்டு புதிய சொத்துக்களை வாங்கி அதில் வீடு கட்டத் தொடங்குவீர்கள்.

ஆறாம் இடத்தை எதிரிகள் ஸ்தானம் என்று சொல்வார்கள். அதுமட்டுமல்ல நோயைக் குறிப்பிடும் இடமும் அதுதான். எனவே, அந்த இடத்தை குரு பார்ப்பதால் எதிரிகள் விலகுவர். மறைமுகப் பகை அகலும். சாதாரண சிகிச்சை மூலமாகவே உடலில் நீண்டநாட்களாக இருந்த நோய்கள் பறந்தோடும்.

அஷ்டம ஸ்தானத்தை குரு பர்ர்ப்பதால் இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பு கிட்டும். தேவையற்ற விரோதங்களை வளர்த்துக் கொள்ளாமல் தேனாகப்பேசி வளைந்து கொடுப்பது நல்லது. சுப காரியப்பேச்சுக்களில் ஏற்பட்ட இடையூறுகள் அகலும்.

**சஞ்சாரப் பலன்கள்**

குருதன் சுய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (13.06.2014 முதல் 28.06.2014 வரை):- தேக ஆரோக்கியம் திருப்தி அளிக்கும். தெய்வீக சிந்தனை மேலோங்கும். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். வெளிநாடு, வெளிமாநிலம் போன்றவற்றில் பணிபுரிய வாய்ப்புகள் வரும். பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் வந்து சேரும். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடிவடையும்.

சனி சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது (29.06.2014 முதல் 27.08.2014 வரை):- காரியங்கள் கடைசி நேரத்திலேயே கைகூடும். பற்றாக்குறை பட்ஜெட் உருவாகலாம். புதிய முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படும். அரசாங்கச் சலுகை வருவதில் காலதாமதம் ஏற்படுவது கண்டு கவலைப்படுவீர்கள். உதிரி வருமானங்கள் குறையலாம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது.

புதன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது (28.08.2014 முதல் 02.12.2014 வரை) பண வசதி பெருகும். மனக்குழப்பங்கள் அகலும். தொழில் முயற்சிக்கு தொல்லை தந்தவர்கள் எல்லையை விட்டு விலகுவர். தொழிலுக்கான மூலதனத்தை நண்பர்கள் மனமுவந்து தருவர். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தென்படும். தேக நலன் சீராகும். தெய்வத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**வளர்ச்சி தரும் சிறப்பு வழிபாடு!**

ஞாயிற்றுக்கிழமை தோறும் சிவன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். கற்பக விநாயகரை வழிபட்டு கனவுகளை நனவாக்கிக் கொள்ளுங்கள்.

**சிம்ம இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

குரு விரய ஸ்தானத்தில் சஞ்சரித்தாலும் அதன் பார்வை பலத்தால் சுக ஸ்தானமும் பலமடைகிறது. எனவே, ஆரோக்கியம் சீராகும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். வீண் குழப்பங்களிலிருந்து விடுபடுவீர்கள். விருப்பப்பட்டபடியே தொழில், உத்தியோகத்தில் மாறுதல் கிடைக்கும். உறவினர் வருகை அதிகரிகரிப்பதன் மூலம் பகையும் உருவாகலாம். இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக சுபச் செலவுகள் அதிகரிக்கும் என்பதால் வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழலாம். பழைய ஆபரணங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய ஆபரணங்களை வாங்குவீர்கள். கணவன்- மனைவிக்குள் இருந்த சச்சரவுகள் அகலும். தம்பதியர்களின் ஒற்றுமைக்கு பங்கம் விளைவித்தவர்கள் விலகுவர். குழந்தைகளின் நலன் கருதி எடுத்த அந்நிய தேச முயற்சிகள் கைகூடும். தாய்வழி ஆதரவு கூடும். பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய திருப்பங்கள் ஏற்படும். வடக்கு நோக்கிய விநாயகர் வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

குரு பகவான் 03.12.2014 முதல் 21.12.2014 வரை மகம் நட்சத்திரக்காலில் அதிசாரமாகச் செல்கிறார். இக்காலத்தில் இனம்புரியாத கவலை மேலோங்கும். எதிரிகளின் பலமும் அதிகரிக்கும். டிசம்பரில் 17 முதல்



குருப் பெயர்ச்சி நேர ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| | சுக்ரன் கேது | சூரியன் புதன் (வ) | |
| | குருப்பெயர்ச்சி | | வியாழன் |
| | 13-6-2014 | | |
| சந்திரன் | | சனி (வ) ராகு | செவ்வாய் |

***சுப ஸ்ரீ ஜய வருடம் வைகாசி மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (13.06.2014) மாலை 6.03 மணிக்கு புனர்பூசம் நட்சத்திரம் நான்காம் பாதத்தில் கடக இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கிறார். இந்த வீடு குருவிற்கு உச்ச வீடாகும்.***

**குருவின் வக்ர காலம்**

- **13.06.2014 முதல் 28.06. 2014** வரை புனர்பூசம் 4 இல் நட்சத்திரக் காலில் குரு. (தனது சாரம்)
- **29.06.2014 முதல் 27.08 2014** வரை பூசம் நட்சத்திரக்காலில் குரு. (சனி சாரம்)
- **28.08.2014 முதல் 02. 12.2014** வரை ஆயிலியம் நட்சத்திரக் காலில் குரு. (புதன் சாரம்)
- **03.12.2014 முதல் 21.12.2014** வரை மகம் நட்சத்திரக் காலில் குரு அதிசாரமாக செல்கிறார்.
- **17.12.2014 முதல் 21.12.2014** வரை கேது சாரத்தில் குரு வக்ர கதி.
- **22.12.2014 முதல் 14.04.2015** வரை ஆயிலியம் நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் வக்ர கதியில் குரு செல்கிறார்.
- **15.04.2015 முதல் 04.07.2015** வரை ஆயிலியம் நட்சத்திரம் புதன் சாரத்தில் நேர் கதியில் குரு செல்கிறார்.
- **05.07.2015 அன்று குரு சிம்ம இராசியில் பிரவேசிக்கிறார்.**

சிம்மத்தில் வக்ர கதியில் இயங்குகிறார். தொடர்ந்து 14.04.2015 வரை குரு வக்ர கதியிலேயே சஞ்சரிக்கிறார்.

உங்கள் இராசியைப் பொறுத்தவரை 5,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். பஞ்சம ஸ்தானாதிபதி வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. அஷ்டம ஸ்தானாதிபதி வக்ரம் பெறுவது நன்மைதான். அந்த வக்ர இயக்கத்தால் பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் உருவாகி மறையும்.

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

வாகன மாற்றம் செய்ய உகந்த நேரம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீர் பதவிஉயர்வு வந்து சேரலாம். கடந்த காலத்தில் தொழில் இழப்புகளை ஈடுசெய்ய புதிய பங்குதாரர்கள் வந்து இணைவர். பயணங்களால் பலன் கிடைக்கும் நேரமிது.

நாளை கன்னி.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் அறிவும் நலவாழ்வும்

பூகோளத்திலுள்ள எல்லா உயிரினங்களிலும் சிறப்பு வாய்ந்த, அறிவில் உயர்ந்த உயிராக ஓர் மனிதன் காணப்படுகின்றமையினாலோ என்னவோ பல்வேறு பிரச்சினைகளிற்கு அவன் முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

தனிநபர் இடையிலான பிரச்சினைகள், குடும்ப பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள் என்று பிரச்சினைகளின் பட்டியல் விரிந்து கொண்டே செல்கின்றது.

இவ்வாறு பிரச்சினை பிரச்சினையென பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி மட்டுமே மேலோட்டமாக நாம் பார்க்கிறோம்.

உண்மையில் "பாலியல்" என்பதும் அடிப்படையில் பசி, தாகம் போல எல்லா மனிதருக்கும இயல்பான ஓர் உணர்வே. அதைப் பற்றி அறிவதோ, பேசுவதோ விரும்பத்தகாத அல்லது வெறுக்கத்தக்க செயலல்ல. எந்த



கல்வித் தரிசனம்

மதமோ பாலியலை வெறுக்கத்தக்க ஒன்றாக கூறவில்லை.

பாலியல்சார் ஒழுங்கீனங்களும் பல்வேறு பிரச்சினைகளும் ஏற்படுவதற்கு பாலியல்சார் அறிவின்மையே அடிப்படைக் காரணமாக இருக்கின்றது. தற்கால அறிஞர்கள பாலியலை எல்லாவற்றுக்கும் அடிப்படையாக கருதிய சிக்மன் பிராய்டை விமர்சித்த போதிலும் ஆழ்ந்து நோக்கும் போது அவரது கருத்துக்களை ஏற்க வேண்டிய தேவை காணப்படும். ஏனெனில் பாலியல் ஒரு பாரிய சக்திவாய்ந்த உந்துதலாகும்.

உலகில் காணப்படும் பாலியல் சார் இயலாமைக்கு உடலியல் காரணிகள் 10 வீதம் மட்டுமே உள்ளது. எனினும், 90 வீதமாக உளவியல் தாக்கமே காரணமாக அமைவதாக புள்ளி விபரங்கள் சுட்டுகின்றன. இந்த உளவியல் தாக்கத்துக்கு காரணமாக பாலியல் குறித்த பூரண அறிவின்மை அல்லது தவறாக அறிந்து கொள்ளுதலே காரணமாகும். தவறான பாலியல் பற்றிய அறிவிற்கு மஞ்சட பத்திரிகைகளும், நீலப்படங்களும். காரணமாக அமைகின்றன. இவற்றின் வாயிலாக தவறாக பாலியலைப் பற்றி அறிந்து கொள்ளும் போது அது பிரச்சினையில் போய் முடிகிறது.

பாலியல் குறித்த அறிவைப் பெற்றிருப்பது பல்வேறு பிரச்சினையிலிருந்து எம்மை காக்க எம் சமுதாயத்தைக் காக்க உதவி புரிகிறது. குறிப்பாக பதின்ம பருவப் பிள்ளைகளுக்கு பாலியல் குறித்த அறிவை வழங்குவது அவர்களை பல சிக்கல்களிலிருந்து காத்து அவர்களது வாழ்வை ஒளிமயமாக மாற்றும். உதாரணமாக தேவையற்ற பதின்ம வயதுக் கர்ப்பம், பாலியல் மூலம் பரவும் நோய்கள், பாலியல் துஷ்பிரயோகம் போன்ற ஆபத்துக்களிலிருந்து அவர்களை பாதுகாக்க பாலியல் கல்வி துணை புரியும்.

தமிழர் சமுதாயத்தில் என்றும் இல்லாத அளவு பாலியல் விலகல் நடத்தைகளும் பாலியல் சார் குற்றச்சாட்டுகளும் வெகுவாக அதிகரித்து இருப்பதோடு, பாலியல் மூலம் பரவும் நோய்கள் (STD) மிக வேகமாக அதிகரித்து இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

இவை ஒரு தனி மனிதனை மட்டுமன்றி மொத்த சமுதாயத்தையும் நாசம் செய்யும் வலிமை பெற்றவை. இவற்றிலிருந்து எம்மைக் காக்க பாலியல் கல்வி மிக மிக அத்தியாவசியமாகிறது.

பல பாடசாலைகளில் பாலியல் மற்றும் இனப்பெருக்கம் சார்ந்த பாடவிதானங்கள் கற்பிக்கப்படாமலேயே விட்டுவிடப்படுகிறது. அவை சார் நூல்கள் தூசி படிந்து கிடக்கின்றன.

பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் பாலியல் குறித்த ஏதாவது கேள்வி எழுப்பினால் கேட்கக் கூடாததை பிள்ள்ள கேட்டு விட்டது போன்று மிரட்டல்களுடன் சில சமயம் சரீர தண்டனையும் வழங்குகின்றனர்.

இவ்வாறு பெற்றோர்கள் நடக்கும் போது பிள்ளைகள் மனதிலே இந்த விடயம் ஏதோ அசிங்கமானது என்றும் இது பற்றி பேசுவது குற்றம் என்றும் தன்னளவில் நினைத்து விடுவதால் அவர்களின் எதிர்காலப் பாலியல் வாழ்வு சீரழிக்கப்படுகிறது.

ஏனெனில் எதிர்காலத்தில் பாலியல் நடத்தையில் குறித்த நபர் ஈடுபடும் போது அது தவறான செயல் என்ற மனப்பதிவு இருந்து கொண்டு அவனை அல்லது அவளை குற்ற உணர்வுக்கு ஆளாக்கும். இது பாலியல் சார் இயலாமைகளிற்கும் (Dysfunctions) விலகல நடத்தைகளுக்கும் வழி வகுக்கும்.



செல்வி சி.தமிழரசி
மெய்யியல் துறை
மூன்றாம் வருடம்
யாழ்.பல்கலைக்கழகம்


எனவே பாலியல் சார் அறிவை பிள்ளைகளுக்கு வழங்குவது பெற்றோரதும் ஆசிரியர்களினதும தார்மீகப் பொறுப்பும் கடமையுமாகும்.

அதேவேளை வளர்ந்தவர்கள் பாலியல் குறித்த விடயத் தெளிவினைப் பெற்றிருப்பது அவர்களது பாலியல் வாழ்வை மகிழ்ச்சிகரமானதாக மாற்ற துணை புரியும்.

கல்வித் தரிசனம் பகுதிக்கு
துறைசார்ந்தவர்களிடமிருந்து
தரமான ஆக்கங்கள்
கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

# நாடாளுமன்றத்திற்கு வெளியில் நாடாளுமன்றம் அமைப்பேன்

## அத்துரலிய ரத்ன தேரர் தெரிவிப்பு



தர்ம ராஜ்ஜியத்தை ஏற்படுத்தப் போவதாகக்கூறி நாடாளுமன்றத்திற்கு சென்ற ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழு தலைவர் அத்துரலிய ரத்ன தேரர், நாடாளுமன்றத்திற்கு வெளியில் நாடாளுமன்றம் ஒன்றை ஆரம்பிக்க போவதாக கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தூய்மையான எதிர்காலத்திற்கான தேசிய சபை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட உள்ள இந்த நாடாளுமன்றம், எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் வாரம் தோறும் செவ்வாய்க் கிழமைகளில் கொழும்பு பௌத்த லோக மாவத்தையில் உள்ள புத்திஜீவிகள் சங்கத்தின் தலைமையகத்தில் கூடவுள்ளதாக ரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார்.

தூய்மையான எதிர்காலத்திற்கான தேசிய சபை என்ற இந்த நாடாளுமன்ற அமர்வுகளில் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் உட்பட சகல தரப்பினரும் கலந்து கொள்ள முடியும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் மாத்திரமல்லாது அனைத்து கட்சிகளுக்கும், நாட்டை பாதுகாக்க வேண்டும என்ற உணர்வு உள்ள சகலருக்கும் அமர்வுகளில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (2)

# தூதரகங்களுக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டங்கள்

புகலிடம் கேட்டு அகதிகளாக வாழ்ந்துவரும் தமிழர்களைக்கூட மலேசியா தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைத்துவருவது மிக மோசமான தமிழ் இனத்துக்கு எதிரான நடவடிக்கையாகும்.

இந் நடவடிக்கைக்கு எதிராக கடந்த நாட்கள் ஜேர்மனியில் பேர்லின் மற்றும் பிராங்க்போர்ட் நகரிலும் பிரான்ஸ் நாட்டிலும் கவனயீர்ப்பு நிகழ்வுகள் நடைபெற்றன.

ஜேர்மனியில் பேர்லினில் மலேசிய தூதரகத்துக்கு முன்னாலும் பிராங்க்போர்ட் நகரில் மலேசியா துணைத்தூதரகத்துக்கு முன்னாலும் கவனயீர்ப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

நிகழ்வில் தமிழின அழிப்பை எடுத்துரைக்கும் பதாகைகள் மக்களால் ஏந்திய வண்ணம், மலேசிய பாதுகாப்பு தேடி புகலிடம் தேடி வருபவர்களை இலங்கை அரசிடம் திருப்பி அனுப்ப கூடாது எனவும் கோரப்பட்டு மனு கையளிக்கப்பட்டது.





பிரான்சில் தமிழீழ மக்கள் பேரவையால் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான நிறுவனத்துக்கு முன்னாலும் கவனயீர்ப்பு ஒழுங்கு செய்யப்பட்டது.

இக் கவனயீர்ப்பில் மலேசியா தமிழ் மக்களை இலங்கை அரசாங்கத்திடம் திருப்பி அனுப்ப வேணடாம் என்றும் மனு கையளிக்கப்பட்டது.

சர்வதேச சட்டங்களுக்குப் புறம்பாக அப்பாவித் தமிழர்களை நாடு கடத்தி, சித்திரவதைக்கும் கடூழியச் சிறைக்கும் இனவழிப்புக்கும் துணை போகும் தமிழர் விரோதப் போக்குடைய நாடுகளுக்கு எதிராக நியாயக் குரல்களை எழுப்பி, உலகத் தமிழர்கள் போராட வேண்டியது மிகவும் அவசியமாகும் என அனைத்துலக ஈழத் தமிழர் மக்கள் அவை தெரிவிக்கின்றது. (2)

# மின்சாரசபை ஊழியர்களின் சம்பள நிலுவை தீர்க்கப்படும்

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் 2012ஆம் ஆண்டு மே மாதம் முதல் எதிர்கொண்டு வந்த சம்பள முரண்பாட்டை இம் மாதம் முதல் தீர்த்து வைப்பதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, இலங்கை மின்சார சபை ஊழியர்கள் 2012 ஆம் ஆண்டு மே மாதம் முதல் எதிர் கொண்டு வந்த சம்பள முரண்பாடு தீர்த்து வைக்கப்பட்டு அதற்குரிய சம்பளம் இம்மாதம் முதல் வழங்கப்படவுள்ளது.

இதற்குரிய சகல நடவடிக்கைகளையும் இலங்கை மின்சார சபை முகாமைத்துவம் மேற்கொண்டுள்ளதாக அதன் அதிகாரியொருவர நேற்று முன்தினம் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில் அற்ப அரசியல் இலாபம் பெறும் நோக்கில் ஓரிரு தொழிற்சங்கங்கள் செயற்பட முனைவது ஏற்றுக் கொள்ள முடியாது என்று தொழிற்சங்க முக்கியஸ்தரொருவர் நேற்று முன் தினம் கூறினார்.

இலங்கை மின்சார சபையின் சகல தரத்திலுமான ஊழியர்களுக்கு 2012 ஆம் ஆண்டு மே மாதம் முதல் எதிர்கொண்டு வந்த சகல சம்பள முரண்பாடுகளையும் தீர்த்து வைக்குமாறு தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்தன.

இதன்படி, கடந்த 2012 ஆம் ஆண்டு மே மாதம் ஏற்பட்ட இச் சம்பள முரண்பாடு அதே மாதம் நிறைவேற்றுத் தரத்திலுள்ள ஊழியர்களுக்கு தீர்த்து வைக்கப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டு வருகின்றது.

ஏனைய ஊழியர்கள் எதிர் கொண்டு வந்த இச்சம்பள முரண்பாடும் தீர்த்து வைக்கப்பட்டு அதற்குரிய கொடுப்பனவு இம்மாதம் முதல் சம்பளத்துடன் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மின்சார சபை தெரிவித்துள்ளது.


இதேவேளை, 2012 ஆம் ஆண்டு மே மாதம் முதல் நிலவி வந்த சம்பள முரண்பாட்டு நிலுவைத் தொகையை இரண்டு கட்டங்களாக வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம், 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இந்நிலுவையில் 50 வீதமும் எஞ்சிய 50 வீத நிலுவையை 2015 ஆண்டு ஜுலை மாதம் முதலும் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபைத் தொழிற்சங்கங்களுடன் நடத்திய கலந்துரையாடல்களின் அடிப்படையிலேயே இந்த இணக்கப்பாடுகள் காணப்பட்டுள்ளன என்றும் மின்சார சபை தெரிவித்தது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



61

ஆரம்பத்தில் எனக்குள் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாதவரும் போகப் போகத் தன் கலைப் படைப்புகளால் என் கவனத்தின் காதுகளைத் திருகியவரும் பக்கத்தில் நெருங்க நெருங்க இவர் அளந்து பார்க்கப் பட வேண்டிய ஆள் என்று என்னை அசைபோட வைத்தவரும் கே.பாக்யராஜ் அவர்கள்தான்.

அவர் பளிச்சென்று மின்னலிட்டு என் பார்வையைப் பறித்துக் கொண்டது படத்தின் மூலம் அல்ல; ஒரு பதிலின் மூலம்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் "இதயம் பேசுகிறது" இதழில் பாக்யராஜிடம் கேட்கப்பட்டது ஒரு கேள்வி:

"ஒரு நடிகைக்குக் கொடுக்கும் முத்தத்திற்கும் ஒரு மனைவிக்குக் கொடுக்கும் முத்தத்திற்கும் என்ன வித்தியாசம்?"

இந்தக் கேள்வியை வாசித்தபோது அநாகரிகமாகவும் அர்த்தத்தை 'அபார்ஷன்' செய்து விட்ட கேள்வியாகவும் எனக்குப் பட்டது.

ஆனால் இப்படியொரு கேள்விக்குக்கூட அப்படியொரு பதிலைக் கொடுத்த பாக்யராஜை என் மனசில் இருந்த அறிவாளிகளின் வரிசையில் அமர்த்திக் கொண்டேன்.

அவர் சொல்லியிருந்தார்:

"நடிகைக்குக் கொடுக்கும் முத்தம்- ஐக்கியம் இல்லாத உணர்ச்சி; மனைவிக்கு கொடுக்கும் முத்தம்- உணர்ச்சி இல்லாத ஐக்கியம்." சில்லென்று சிரிக்க வைத்து சின்னதாய்ச் சோகப்பட வைக்கிற பக்குவமான பதில் இது.

இதற்குப் பிறகு பாக்யராஜுக்குள் பதுங்கி இருக்கும் நடிகரை, கலைஞரை, இயக்குநரை, தயாரிப்பாளரைக் கொஞ்சம் மறந்துவிட்டு, அவருக்குள் இருக்கும் எழுத்தாளரை அதிகமாய் அடையாளம் காண ஆசைப்பட்டேன்.

அவர் வசனங்களிலிருக்கும் தர்க்கம், பாத்திரங்களின் வாய்களுக்குத் தேர்ந்தெடுக்கும் வார்த்தை, தெருமனிதர்களைத் திரை மனிதர்களாய் உயர்த்திய திடம், வட்டார வழக்கு வழங்கிய பலம், நெஞ்சில் சுமந்திருக்கும் பழைய காலப் பதிவுகள்- இவையெல்லாம் சேர்ந்து பாக்யராஜை திரையுலகின் அழுத்தமான எழுத்தாளராய் ஆக்கியிருக்கின்றன என்று அறிந்து ஆனந்தித்தேன்.




திரு.பாரதிராஜா அடித்தல் திருத்தல் இல்லாமல் என்னிடம் அடிக்கடி சொல்லும் ஒரே வாசகம்:

"எங்கிட்ட இருந்த ஒரே ரைட்டர் பாக்யராஜ்தான்; அவன்தான் ரைட்டர்."

இதைச் சொல்லும் போதெல்லாம் இந்தச் சொல்லுக்குள் இருக்கும் சத்தியம் அவர் கண்களில் தகிக்கப் பார்ப்பேன்.

எதைச் சொல்லுவது என்பது அறிவு; எப்படிச் சொல்லுவது என்பது உத்தி.

இந்த அறிவும் உத்தியும் சரிக்குச் சரி வாய்க்கப் பெற்ற அற்புதமான அர்த்தநாரீஸ்வரர் பாக்யராஜ்.

சிகரங்களைப் பறந்து அடைவது ஒருவகை; சிகரங்களை நடந்து அடைவது ஒரு வகை; ஆனால் பாக்யராஜ் சிகரங்களை அடைந்தது ஊர்ந்து... ஊர்ந்து...ஊர்ந்து...

பாக்யராஜின் வெற்றியில் பாக்யராஜ் அடைந்த இலாபத்தை விட, அவநம்பிக்கையில் அழுது அழுது அழுகிக் கிடந்த ஒரு சராசரி இளைஞர் கூட்டத்திற்கு ஒரு நம்பிக்கை கிடைத்ததே- அதைத்தான் அதிக இலாபம் என்று அறிந்து சொல்கிறேன்.

யோசித்துப் பார்க்கிறேன்.

தன் பலவீனங்களையே பலங்களாக மாற்றியதே அவர் பலம் என்பதை தூரத்திலிருந்தே துப்பறிகிறேன்.

அவருக்கு இருப்பதெல்லாம் பெரிய மன்மத லட்சணங்கள் இல்லை; மனித லட்சணங்கள்தாம்.

அதனால் பாத்திரங்களுக்குத் தன்னை வார்த்துக் கொள்ளாமல், தனக்குப் பாத்திரங்களை வார்த்துக் கொண்டார்.

கண்ணாடி என்பது அவருக்கொரு கட்டாயம். தனக்கு ஆதரவு அளித்த பாலகுரு தூரத்தில் வந்து நின்றபோது அவரைக்கூடப் பார்க்க முடியவில்லையே என்பதனால் அவரது முதல் மனைவி பிரவீணாவால் அவர் கண்ணுக்குச் செய்யப்பட்ட நிர்ப்பந்த ஒப்பந்தம் அந்தக் கண்ணாடி.

தமிழ் சினிமாவில் அழகுக்காக இல்லாமல் அவசியத்துக்காகவும் கண்ணாடி போட்டுக் கொண்டு வெற்றி அடந்த கதாநாயகன் பாக்யராஜ்தான்.

தனி வாழ்வில் கண்ணாடி அவரது பலவீனம்; பொதுவாழ்வில் அவரது ஆபரணம்.

யானையின் பிளிறல், சிங்கத்தின் கர்ஜனை, வேங்கையின் உறுமல்- கதாநாயகனின் குரல் இவற்றில் ஏதாவது ஒன்றாய் இருக்க வேண்டும் என்பதே தமிழ் சினிமாவின் வால்போஸ்டர் சட்டம். (தொடரும்)

-வைரமுத்து -

# சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாரம் இன்று ஆரம்பம்

## வடமாகாண விவசாய அமைச்சர்

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாரமாக இன்று தொடக்கம் எதிர்வரும் 11ஆம் திகதி வரையான ஒருவார காலப்பகுதியை கடைப்பிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச் செய்தி குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, ஐக்கிய நாடுகள் சபை ஆண்டு தோறும் யூன் 5ஆம் திகதி உலக சுறறுச்சூழல் தினத்தைக் கொண்டாடி வரு கிறது.

இந்த ஆண்டின் சுற்றுச்சூழல் தினத்துக்கான கருப்பொருளாக ஐக்கிய நாடுகள் சபை "சிறு தீவுகளும் கடல் மட்ட உயர்வும்" என்பதைத் தேர்வு செய்ததோடு 'உங்கள் குரலை உயர்த்துங்கள், கடல் மட்டத்தை அல்ல' என்பதை இத்தினத்துக்கான உத்தியோகபூர்வ சுலோகமாகவும் அறிவித்துள்ளது.

பூமி வெப்பம் அடைவதால் கடல் மட்டம் உயர்ந்து சிறு தீவுகளை மூழ்கடிக்கவுள்ள அபாயம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இக்கருப்பொருளைத் தேர்வு செய்தமைக்கான நோக்கம் ஆகும்.

இலங்கைத் தீவிலும் சமதரையையும் தாழவான நிலப்பகுதியையும் அதிக அளவில் கடல் நீரேரிகளின் ஊடறுப்புகளையும் கொண்டிருப்பதன் காரணமாக யாழ்ப்பாணக் குடாநாடு கடற்பெருக்கின் அபாயத்தை அதிகமாகவே கொண்டிருக்கிறது.

அதிலும், குடாநாட்டின் நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு வேலணை, மண்டைதீவு என்று குடாநாட்டின் சிறுதீவுகள் அனைத்தையும் சத்தமில்லாமலே கடல்நீர் மூடிவிடும் ஆபத்து இன்னும் அதிகமாக நிலவுகிறது என்று சூழலியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடல் கரையைத் தாண்டாமல் தடுப்பதற்காக இயற்கையாகவே கடல் எல்லையில் பவளப் பாறைகள், மணல் மேடுகள், கண்டற்காடுகள் என்று பல அடுக்குகளில் போட்டு வைத்திருக்கும் பாதுகாப்பு அரண்கள் அனைத்தையுமே நாம் மிகை நுகர்வுக்கு உட்படுத்திச் சீரழித்துக் கொண்டிருக்கிறோம்.

போரினால் அழிந்த எமது சூழல் எமது இயற்கை விரோதச் செயற்பாட்டின் காரணமாக மேலும் மேலும் பாதிக்கப்படுவதால், பாரம்பரியமாக நாம் வாழ்ந்த மண்ணில் இருந்து சூழல் அகதிகளாக இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு வருகிறது.

இது தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் வடமாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு யூன் மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரையான காலப் பகுதியை வடமாகாண சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாரமாகக் கடைப்பிடிக்கத் தீர்மானித்துள்ளது.

இக்காலப்பகுதியில் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் விதமாகக் கல்வி அமைச்சுடன் இணைந்து கருத்தரங்குகள், கடற்கரையோரத்தைச் சுத்தப்படுத்தும் சிரமதானம், மரநடுகை போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் உள்ள ஆயிரத்து77 பாடசாலைகளுக்கும் இது தொடர்பான சுற்று நிருபமும், பிரசுரங்களும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

பாடசாலைகள் மட்டுமல்லாது வட மாகாணத்தின் உள்ளூராட்சிமன்றங்கள், சனசமூக நிலையங்கள் போன்ற பொது அமைப்புக்கள் யாவற்றையும் இந்த ஒருவார காலப் பகுதியை சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாரமாகக் கடைப்பிடிக்கும்படி வேண்டுகிறோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புலோலி மத்தி ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

இதற்கமைய எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11.45 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடை பெறும். (2)

# கடனட்டை மோசடியில் ஈடுபட்டவர்கள் கைது

(கொழும்பு)

போலி கடன் அட்டை மூலம் பெருந்தொகை பண மோசடியில் ஈடுபட்ட நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண இரகசியப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலைத் தொடர்ந்து, மேற்கொண்ட தேடுதலின்போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் காலி வீதி, தெஹிவளை பிரதேசத்தில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்தவேளை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்படும்போது சந்தேக நபரிடமிருந்து 437 போலி கடன் அட்டைகள், போலி கடன் அட்டை அச்சிடும் இயந்திரம் மற்றும் 40 ஆயிரம் ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நெல்லியடி, திரு கோணமலை மற்றும் வெள்ளவத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை வங்கி அட்டை மோசடியில் ஈடுபட்ட மூன்று இலங்கையர்களுக்கு பிரித்தானியாவில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் க்ளோஸ்டஷெயார் பிரதேசத்தின் வங்கி தானியக்க நிலையங்களில் மோசடிகளில் ஈடுபட திட்டமிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

13 ஏ.ரீ.எம். நிலையங்களின் வாடிக்கையாளர் தகவல்களை திரட்டி அவற்றின் ஊடாக மோசடியில் ஈடுபட திட்டமிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

குற்றச் செயலில் ஈடுபட்டதை இவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரையில் இந்தக் குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளன.


ஒருவருக்கு 16 மாத கால சிறைத் தண்டனையும், ஏனைய இருவருக்கும் ஒரு ஆண்டு கால சிறைத்தண்டயையும் நீதி மன்றம் விதித்துள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுமா? வேண்டாமா?

...தெற்கு ஐரோப்பிய நாடுகள் மீது சுமத்தப்பட்டிருக்கும் கடன் நெருக்கடியிலிருந்து வெளிவர உதவுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் கடன் பத்திரங்களை வெளியிடலாம் என்ற திட்டத்தை ஜேர்மனிய நிதித்துறையினரும், முதலாளிகளும் எதிர்க்கின்றனர். கிரேக்கம் போன்ற நாடுகள் தமது செலவுகளைக் குறைக்கும்படியும், மக்கள் நலத் திட்டங்களை வெட்டும்படியும், வரிவிதிப்பை அதிகரிக்கும்படியும் ஆலோசனை கூறுகின்றனர். இதன்மூலம் நிதி சூதாட்டத்தின் பலன்களை அறுவடை செய்துகொணட முதலாளிகள் சுமையை உழைக்கும் மக்கள் மீது சுமத்துகின்றனர்.

புதைகுழியில் ஐரோப்பா, கிரேக்கம், ஸ்பெயின், போர்ச்சுக்கல் போன்ற தெற்கு ஐரோப்பிய நாட்டு முதலாளிகளும் ஆளும் வர்க்கமும் ஜேர்மனியின் கட்டளைக்கு அடிபணிந்து தமக்குத் தேவையான நிதிக் கடன்களை பெறுவதற்கு கைமாறாக மக்கள் நலத் திட்டங்களை வெட்டியும், பொது நிறுவனங்களில் ஆட்குறைப்பு செய்யும் உழைக்கும் மக்கள் மீது கடும் சுமைகள் மேலும் மேலும் ஏற்றி வருகின்றனர். இந்நாடுகளில் தொழிலாளர் வேலை நிறுத்தங்கள், அரசு ஊழியர் போராட்டங்கள், மக்கள் போராட்டங்கள் வலுத்து வருகின்றன. கிரேக்க நாட்டில் சிக்கன நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டதால் பொருளாதாரம் சென்ற




ஆண்டை விட 7.5 சதவீதம் சுருங்கியிருக்கிறது.

இருப்பினும், கிரேக்கம்போன்ற நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவது எண்ணெய் சட்டியிலிருந்து தப்பி எரியும் நெருப்புக்குள் விழுவதாகவே முடியும். சுயசார்பு தொழில்துறை பொருளாதாரம் அழிக்கப்பட்டு உலகளாவிய ஏகாதிபத்திய பொருளாதாரத்தில் பிணைக்கப்பட்டுள்ள அந்நாடுகளின் பொருளாதாரங்கள் புதிய நாணயத்தை அறிமுகப்படுத்தி நடைமுறைக்குக் கொண்டு வரும் சிக்கல்களில் மேலும் சீர்குலைவை எதிர்கொள்ள நேரிடும்.

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வரும் மக்களை அமைப்பாக்கி போராடும் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சிகள் வலுவாக இல்லாத நிலையில் புலம்பெயர் தொழிலாளர்கள்தான் நெருக்கடிகளுக்கு காரணம் என்று இனவெறியையும், நிறவெறியையும், மதவெறியையும் தூண்டிவிடும் வலதுசாரி கட்சிகளின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது. தொழில் 'அமைதி' வேண்டும் முதலாளிகளின் ஒரு பிரிவினர் இந்த புதிய பாசிசக் கட்சிகளை நிதி கொடுத்து ஆதரிக்கின்றனர். தொழிலாளி வர்க்கம் ஒன்றுசேர்வதை இனவெறி தடுக்கும் என்பதால் இந்த உதவி.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் சோசலிச முகாமுக்கு ஈடு கொடுக்கும் வகையில் மேற்கு ஐரோப்பாவை மாற்றுவது முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துக்கு தேவையாக இருந்தது. இராணுவ ரீதியாக நேட்டோ அமைப்பை ஏற்படுத்தி இராணுவ ஆதிக்கத்தை ஐரோப்பாவில் நிலை நாட்டிக்கொண்டாலும், பொருளாதார ரீதியாக மேற்கு ஐரோப்பிய நாடுகளிடையே போட்டியை தவிர்த்து ஒன்றுபடுத்தும் தேவை ஏற்பட்டது. பின்னர் பிரெஞ்சு மற்றும் ஜேர்மனி ஏகாதிபத்தியங்களின் நலனுக்கானதாகவும் இந்த கோரிக்கை மாறிப்போனது.

இந்தச் சூழலில் 'ஐரோப்பாவில் அமைதியையும் சாந்தியையும் ஏற்படுத்தவும் தங்களுக்குள் போரை தவிர்க்கவும்' நிலக்கரி, மற்றும் உருக்கு துறைகளில் போட்டிச் சந்தையை ஒழிப்பதற்காக பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி, லக்சம்பர்க், நெதர்லாந்து, மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகள் ஒப்பந்தம் போட்டுக் கொண்டன. இந்த அமைப்பு ஐரோப்பிய பொருளாதார கூட்டமைப்பாக வளர்ச்சி பெற்று அடுத்த 30 ஆண்டுகளில் டென்மார்க், அயர்லாந்து, யுகே, கிரேக்கம், போர்ச்சுக்கல், ஸ்பெயின் போன்ற நாடுகள் அதில் இணைந்தன. அதாவது, அமைதியும்,



வளர்ச்சியும் வேண்டுமென்றால் சந்தையில் நடக்கும் கழுத்துப்பிடி சண்டையை தவிர்க்க வேண்டும் என்று முதலாளிகளே ஒத்துக் கொள்கின்றனர். ஆனாலும், முதலாளித்துவத்தின் இயல்பான முரண்பாடுகள் தவிர்க்க முடியாமல் போட்டியையும், போரையும் தோற்றுவித்து விடுகின்றன.

1989-ல் பெர்லின் சுவர் தகர்க்கப்பட்ட பிறகு கிழக்கு ஜேர்மனியை மேற்கு ஜேர்மனியுடன் இணைத்து ஒன்றுபட்ட ஜேர்மனியை உருவாக்குவதற்கு நிபந்தனையாக ஐரோப்பிய பொது நாணயத்தை உருவாக்க வேண்டும் என்று பிரான்ஸ் நிபந்தனை விதித்து. கிழக்கு ஜேர்மனி மற்றும் பின்னர் முதலாளித்துவ கட்டமைப்புக்குள் கொண்டு வரப்படவிருக்கும் பிற கிழக்கு ஐரோப்பிய மற்றும் முன்னாள் சோசலிச குடியரசுகளின் பொருளாதாரத்தையும், உழைப்பையும் சுரண்டுவதற்கு பிரெஞ்சு முதலாளிகளுக்குச் சாதகமாகவும் இருக்க வேண்டும் என்பதுதான் இதன் நோக்கம்.

மாஸ்ட்ரிச்ட் ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1993 இல் ஐரோப்பிய ஒன்றியம் ஏற்படுத்தப்பட்டது. யூரோ நாணயம் 1999ஆம் ஆண்டு முதல் வர்த்தக பரிமாற்றங்களிலும, 2002 முதல் பொது மக்களின் அன்றாட பயன்பாட்டுக்கும் அமலுக்கு வந்தது. வளர்ந்து வந்த உலகமயமாக்கலின் அழுத்தத்தின் கீழ் 1990களில் ஆஸ்திரியா, பின்லாந்து, சுவீடன் நாடுகள் இணைக்கப்பட்டன.

ஐரோப்பிய ஒன்றிய கனவை முன்வைத்து, 2000 ஆண்டுகளில் சைப்ரஸ், செக், ஹங்கேரி, போலந்து, ஸ்லோவாக்கியா, ரொமேனியா, பல்கேரியா ஆகிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் எஸ்டோனியா, லட்வியா, லித்துவேனியா ஆகிய முன்னாள் சோவியத் பால்டிக் குடியரசுகளும் மால்டா, ஸ்லோவேனியா ஆகிய நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், முதலாளித்துவ பொருள் உற்பத்தியும் வர்த்தகமும் உலகளாவிய அளவில் நடைபெற்றாலும் முதலாளித்துவ பெருநிறுவனங்கள் தத்தமது நாட்டு அரசுகளை பயன்படுத்தி தமக்கு சாதகமான அரசியல், பொருளாதார, இராணுவ நடவடிக்கைகளை எடுக்கின்றன. இந்நிலையில் முதலாளிகளின் கூட்டமைப்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளுக்கிடையேயான முரண்பாடுகள் வெடித்து வெளிப்பட ஆரம்பித்திருக்கின்றன.

தரமான கல்வியும் மருத்துவமும் கைக்கெட்டாத உயரத்தில், அன்றாட பொருட்கள் விலைவாசி கண்ணுக்கெட்டாத தொலைவில், சாதாரண மக்கள் கல்விக் கடனுக்காகவும், வீட்டுக் கடனுக்காகவும் துரத்தியடிக்கப்படும் போது கார்ப்பரேட்டுகளும், வங்கிகளும் பல ஆயிரம் கோடி வங்கிக் கடன்களுக்கு பட்டை நாமம் போடுவது, தொழிலாளர் உரிமைகள் பறிப்பு, சிறு வணிகர்களுக்கு நெருக்கடி, படித்த இளைஞர்களுக்கு வேலை இல்லை என்று பொருளாதார நெருக்கடிகளால் பீடிக்கப்படும் ஐரோப்பிய மக்கள் கலவரத்தைத் தூண்டும், இனவாத, மதவாத அமைப்புகள் பக்கம் சாய்கின்றனர். "அதோ பக்கத்து நாட்டிலேயிருந்து வந்து இங்கு அரை வயித்து கஞ்சிக்கு உழைக்குமகூட்டம்தான் பிரச்சினைகளுக்கு காரணம், இவனுங்களை துரத்திவிட்டுட்டா நமக்கு வேலைவாய்ப்பு பெருகும், பிரச்சினைகள் தீர்ந்துவிடும்" என்று வன்முறையை தூண்டும் கும்பலுக்கு இலக்காகி வருகின்றனர்.

மாறாக, இந்த பிரச்சினைகளுக்கு அடிப்படை காரணமான நிதித்துறை நிறுவனங்களையும், வங்கிகளையும், கார்ப்பரேட்டுகளையும் எதிர்த்து உழைக்கும் மக்கள் சார்பாக நடத்தப்படும் போராட்டங்கள் மூலம்தான் முதலாளித்துவத்தை தூக்கி எறிந்து பெரும்பான்மை உழைக்கும் மக்களின் நலன்களை உறுதி செய்யும் அமைப்பை உருவாக்க முடியும். அதை கம்யூனிஸ்ட்டு கட்சிகள் இன்றி செய்ய முடியாது.

ஒருவகையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நெருக்கடி என்பது அமெரிக்க நெருக்கடியோடும் இணைந்திருக்கிறது. அமெரிக்க இன்ஜினே உலக முதலாளித்துவ பொருளாதர ரயிலை இழுத்து வருகிறது என்பதால் அங்கே நெறி கட்டினால் இங்கே தும்ம வேண்டியிருக்கிறது. எனவே எதிர்காலத்தில் அமெரிக்காவிற்கு ஏகபோக ஆதிக்கத்தை தட்டிக் கேட்கும் வலிமையை ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பாக ஜேர்மனி அடையும் போது இந்த முரண்பாடு உலக அளவில் பிரதிபலிக்கும்.

எப்படி பார்த்தாலும் முதலாளித்துவத்தை வீழ்த்தும் சோசலிசப் புரட்சி இன்றி ஐரோப்பா எழ முடியாது. அது ஒருவேளை நடைபெறாவிட்டால் போர்களும், அழிவும் கேட்காமலேயே வருவதற்கு காத்து நிற்கின்றன. ஐரோப்பிய மக்கள் என்ன செய்யப் போகிறார்கள்? (முற்றும்)

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இராணுவத்தை வெளியேற்றினால் மீண்டும் ஆயுதப் போராட்டத்திற்கு வித்திடும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

**இராணுவத்தை வெளியேற்றி வடக்கில் மீண்டும் புலிகளை உருவாக் கவே வடமா காண முதல மைச்சர் முயற்சிக்கின்றார். வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற் றினால் மீண்டும் ஆயுதப் போராட்டத்திற்கு வித்திடும் என தேசப் பற்றுள்ள தேசிய இயக் கம் தெரிவித்தது.**

இந்தியாவை நம்பி அரசியல் நடத்தினால் இறுதியில் அழிவது உறுதியென்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும் எனவும் அவ் இயக்கம் வலியுறுத் தியுள்ளது.

இராணுவத்தை வெளியேற்று வதே குறிக்கோள் என்ற வடமா காண முதல்வரின் கருத்து தொடர்பில் கூறுகையிலேயே தேசப்பற்று ள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கில் இராணுவத்தை வைத திருப்பதனால் பொது மக்கள் ஒரு போதும் பாதிக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாதுகாப்பை விரும்பாததன் கார ணத்தினாலேயே இராணுவத்தை வடக்கில் இருந்து வெளியேற்ற முயற்சிக்கின்றனர்.

விடுதலைப் புலி தீவிரவாதிகள் வடக்கில் இருப்பதாக கடந்த காலங் களில் செய்திகள் வெளிவந்துள் ளன. எனவே, இவ்வாறானதொரு சூழ்நிலையில் வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுவது மிகவும் பயங்கரமான விளைவு களை ஏற்படுத்தும்.

இராணுவத்தை வடக்கில் இரு ந்து வெளியேற்றி விடுதலைப் புலிகளை மீளவும் ஊக்குவிக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு முயற் சிக்கின்றமை திட்டவட்டமாக தெரி கின்றது. இதற்கு அரசாங்கம் இடம் கொடுத்தால் மீண்டும் ஒரு ஆயுத யுத்தத்தினை ஏற்படுத்திவிடும்.

மேலும் அரசாங்கம் எதிர்க்கட் சிகள் அனைத்தும் இந்தியாவின் அரசியலை நம்பியே செயற்படு கின்றன. இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஏற்படுவது தொடர்பில் இலங்கை யோசிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதேபோல் இலங்கை விடயத்தில் இந்தியாவோ அல்லது சர்வதேச அமைப்புகளோ தலை யிட வேண்டிய தேவையும் இல்லை. குறிப்பாக இந்தியாவை நம்பி இங்கு ஆட்சி நடத்தினால் இந்தியாவின் சூழ்ச்சி வலையில் நாமும் சிக்க வேண்டிய தேவை ஏற்படும்.

எனவே அரசாங்கம் சிங்கள மக்களுக்காகவும் நாட்டின் பாது காப்பிற்கெனவும் ஆட்சி நடத்த வேண்டும். அதை தவிர்த்து வடக் கின் பிரிவினையினை கருத்திற் கொண்டு செயற்பட்டால் நாடு நரக மாகிவிடும் எனவும் அவர் தெரி வித்தார். (2)

# வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட 6 சந்தேக நபர்களுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

(கொழும்பு)

வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட ஆறு சந்தேக நபர்களை மேலும் மூன்று மாத காலத்திற்கு விளக்க மறியலில் வைக்குமாறு சட்ட மா அதிபர் நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு வடக்கிற்கு பொறுப் பான முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர், அவரது மகன் உள்ளி ட்ட ஆறு சந்தேக நபர்களை இவ் வாறு விளக்கமறியலில் வைக்கு மாறு கோரப்பட்டுள்ளது.

மூவர் அடங்கிய விசேட நீத வான் குழு முன்னிலையில் நேற்று முன்தினம் வழக்கு விசாரணை க்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போது சட்ட மா அதிபரின் சார்பில் நீதிமன்றில் முன்னிலை யான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஆயேஷா ஜினசேன, சந்தேக நபர்களை மேலும் மூன்று மாத காலத்திற்கு புலனாய்வுப் பிரிவினரின் தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதவான் களிடம் கோரியுள்ளார்.


முதலாம் சந்தேக நபர் ஏற்க னவே விசாரணை நடத்துவோ ரையும் சாட்சியாளர்களையும் அச்சுறுத்தியுள்ளார்.

வழக்கின் குற்றவாளிகளில் ஒருவரைத் தவிர்ந்த ஏனைய அனை வரும் பொலிஸ் உத்தியோகத்தர் கள், பிணையில் விடுதலை செய் தால் சாட்சியாளர்களை அச்சுறுத் தக் கூடிய சாத்தியங்கள் அதிகமா கும். எனவே சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடுமாறு ஆயேஷா கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வழக்கு தொடர்பான விசா ரணைகள் மீளவும் நடைபெறவுள் ளது. (2)

# வடக்கு விவசாயிகளுக்கு அரசு நிவாரணங்கள் வழங்கவில்லை

## பாராளுமன்றில் செல்வம் எம்.பி



இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கம் உதவிகளை வழங்கு வதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்க லநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன் தினம் உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

வடக்கு விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். அரசாங்கம் அவர்க ளுக்குத் தேவையான நிவாரணங் களை வழங்கவில்லை.

வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேறியுள்ளனர். அவர்களுக்கு தேவையான வாழ் வாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

விவசாயிகள் கடன் சுமையி னால் பாதிக்கப்பட்டுள்ளனர். வட க்கு விவசாயிகளை பாதுகாக்க உரிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

ஏனைய பிரதேசங்களில் 300 ரூபாவிற்கு உரம் மானிய அடிப்ப டையில் வழங்கப்படுகின்ற போதி லும், வன்னியில் 500 ரூபாவிற்கே உரம் விற்பனை செய்யப்படுகின் றது.

அதற்கான காரணம் என்ன என்பதனை தெரிந்து கொள்ள முடியுமா?

வன்னி விவசாயிகளின் நலன் களை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (2)

# இன்று ஒரு தகவல்

## நாற்காலி ஆசைகள்

இந்தக்காலத்திலே நாற்காலிக்கு ஆசைப்படாதவர்கள் மிகவும் அபூர்வம்.

அமர்ந்து கொள்ள ஒரு நாற்காலி கிடைக்காதா..... அதனுடைய ஒரு கால் உடைந்து முக்காலியாக இருந்தால் கூட பரவாயில்லை. ஒருவாறு ''அட்ஜஸ்ட்'' செய்து அமர்ந்திருக்கலாம் என்று அலைபவர்கள் எத்தனை பேர் உள்ளனர்.

இந்தக்காலத்தில் மட்டும் தான் இப்படி என்று நினைக்கக் கூடாது. கடந்த காலங்களிலும் தான் இப்படி இருந்திருக் கிறது.

பரமசிவன் வசிஷ்டருக்கு ஒரு விசேடமான ஆசனத் தைக் கொடுத்துள்ளார். அந்த ஆசனத்திலே விசேடம் என்னவென்றால் வசிஷ்டர் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் போகவேண்டுமென நினைத்து புறப்படுகிறார் என்று வைத் துக் கொள்வோம். அவர் செல்வதற்கு முன்பே ஆசனம் சென்றுவிடும். அவ்வாசனம் ஒரு வசதியான இடமாகப் பார்த்து இருந்து விடும்.

வசிஷ்டர் போவார்..... அங்கே அமர்வதற்கு இவருக்கு இடப்பிரச்சினை ஏற்படாது.

அது தான் இவருடைய ஆசனம். முன்னரே அங்கே போய் இவருக்காகக் காத்துக் கொண்டிருக்கே.... அதன் பின் என்ன கவலை? நேராகச் சென்று அங்கே போய் அமர்ந்து கொள்வார்.

இதைப்பார்த்துக் கொண்டிருக்கும் மற்றைய முனிவர் களுக்கு பொறாமையாக இருந்தது. எல்லோரும் ஒரு இடத்திலே கூடி "என்ன இது? நாமும் அவரை மாதிரி தானே! இருந்தாலும் நமக்கு அது மாதிரி ஒரு ஆசனம் கிடைக்கவில்லையே!" என்று யோசித்தார்கள்.

சரி.... நேராகப் பரமசிவனிடம் போவோம். அங்கே பிரச்சினையைக் கூறி தீர்ப்போம் என்று நினைத்து அவரி டம் சென்றனர்.

அங்கே போய், "ஐயா! நாங்களும் முனிவர்கள் தானே! வசிஷ்டர் மாதிரி நாங்களும் கடும் தவம் புரிகிறோம். அப்படியிருக்கும் போது அவருக்கு மட்டும் ஏன் இந்த விசேட சலுகை? என்று கேட்டார்கள்.

அதற்கு பரமசிவன், முனிவர்களே! உங்கள் கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன். அதற்கு முன்னர் நீங்கள் ஒரு காரியம் செய்யவேண்டும்" என்றார்.

"என்ன செய்யவேண்டும்? சொல்லுங்கள்" என்றார்கள்.

"நீங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகச் சென்று உங்களை விட உயர்ந்த ஒருவரைத் தேடிக் கண்டுபிடித்து, அவருக்கு அதிதி பூஜை செய்து ஒரு மண்டலத்தினுள்ளே என்னிடம் அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று கூறி அனுப்பினார்.

"சரி" யென்று இவர்கள் அனைவரும் புறப்பட்டு போய் விட்டார்கள்.

நாட்கள் கடந்த நிலையில் முனிவர்கள் அனைவரும் திரும்பி பரமசிவன் முன்னால் வந்து நின்றார்கள்.

"ஐயா! எவ்வளவோ தேடிப் பார்த்தோம். எங்களைவிட உயர்ந்தவர் யாருமே கிடைக்கவில்லை" என்றார்.

வசிஷ்டரும் வந்து சேர்ந்தார். அவர் சொன்னார் என்னை விட தாழ்ந்தவர் யாருமே கிடைக்கவில்லையே" என்றார்.

இதைக்கேட்டவுடன் மற்றைய முனிவர்களுக்கு வெட்க மாகி விட்டது. இவ்வுலகில் எம்மைவிட மேலானவர்கள் யாருமே இல்லையென்று நாம் நினைக்கிறோம். வசிட்டரோ தன்னை விட தாழ்வானவர்கள் யாருமே இல்லையென்று நினைக் கிறார். பரமசிவன் ஏன் அந்த ஆசனத்தை அவரு க்கு மட்டும் கொடுத்தார்? என்ற கேள்விக்கான பதில் அவர்களுக்கு கிடைத்துவிட்டது.


இந்தக்காலத்திலே நாம் எப்படி நினைக்கிறோம் என் றால், எல்லோரும் நம்மைவிட மட்டமானவர்கள் அத னாலே நாம் மட்டும் நாற்காலியிலே அமர்ந்தால் போதும் என்று நினைக்கிறோம்.

ஏமாந்து போனவர்கள் சந்தர்ப்பம் பார்த்து காலை வாரி விடுகிறார்கள். கீழே விழுந்து காலை உடைத்துக் கொள்கி றோம். அதுதான் இன்று நடைபெறுகிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பிராணிகளை வளர்ப்பவர்கள் இறுதிக்காலத்தில் தனிமையில் வாழநேரிடும்



## பாப்பரசர் எச்சரிக்கை

பிள்ளைகளுக்கு பதிலாக நாய்களையும் பூனைகளையும் வளர்க்கும் ஜோடிகள் தமது முதுமை வயதில் கசப்பு மிக்க கடும் தனிமையில் வாழ நேரிடும் என பாப்பரசர் பிரான்சிஸ் எச்சரித்துள்ளார்.

வத்திக்கானில் இடம்பெற்ற ஆராதனை நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பிள்ளைகளை வளர்ப்பதை விட செல்லப்பிராணிகளை வளர்ப்பது சௌகரியமாக இருக்கலாம். ஆனால் அது அன்பு மற்றும் தெய்வீகம் தொடர்பில் ஒரேமாதிரியான வாய்ப்பை வழங்காது என பாப்பரசர் கூறினார்.

திருமணமாகி 25முதல் 60 ஆண்டுகள் இணைந்து வாழும் 15 ஜோடிகளுக்காக வழங்கிய விசேட ஆராதனையின் போதே அவர் இவ்வாறு கூறினார். அதன்போது குழந்தையொன்றைப் பெற்றுக்கொள்வதில்லை என்ற தீர்மானத்திலிருக்கும் ஜோடிகளுக்கு எதிராக அவர் கண்டனத்தைத் தெரிவித்தார்.

ஒரு நாய் மற்றும் இரு பூனைகளுக்கு அன்பு செலுத்தி வாழ்வது மிகவும் சௌகரியமானதாக இருக்கலாம். ஆனால் இறுதியில் வயோதிப காலத்தில் கசப்பான தனிமையை எதிர்கொள்ள நேரிடும் என அவர் கூறினார்.

இத்தாலியில் கடந்த 5வருட காலத்தில் இல்லாதவாறு கடந்த வருடம் பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே பாப்பரசரின் இந்த உரை இடம்பெற்றுள்ளது.

# ரஷ்யா போர் தொடுத்தால் உக்ரைனுக்கு ஆதரவு வழங்கப்படும்

## அமெ.ஜனாதிபதி உறுதியளிப்பு



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நான்கு நாள் சுற்றுப்பயணமாக ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றுள்ளார். முதல்கட்டமாக போலந்திற்கு சென்ற அவர் ஐரோப்பிய பிராந்தியத்தில் அமெரிக்க பாதுகாப்பு படையை அதிகரிக்க சுமார் ஆறாயிரம் கோடி ரூபாயை ஒதுக்கி உள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவின் போக்கை எதிர்க்கும் வகையில் செயற்பட்ட நேட்டோ நாடுகளுக்கு தனது நன்றியையும் தெரிவித்துள்ளதோடு ரஷ்யா ஏதேனும் போர் நடவடிக்கையில் ஈடுபடுமானால் உக்ரைனுக்கு ஆதரவு அளிப்பதாக அந்நாட்டு தலைவர்களிடம் ஒபாமா உறுதியளித்துள்ளதாக பி.பி.சி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க- போலந்து போர்விமானிகளை சந்தித்து உரையாடிய ஒபாமா ஐரோப்பிய பயணத்தின் போது பெல்ஜியம் மற்றும் பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளுக்கும் செல்ல உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காணாமற்போன லொட்டரி சீட்டை கண்டறிந்து 300 கோடி ரூபா பரிசு பெற்ற தம்பதிகள்

லொட்டரி சீட்டை தொலைத்த தம்பதி கடைசி நேரத்தில் 300 கோடி ரூபாயினை பரிசு தொகையாக பெற்ற சம்பவம் ஒன்று நைஜீரியாவில் நடந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நைஜீரியாவை சேர்ந்தவர் ஹகம் நோசிரு. இவரது மனைவி அபியோலா. இவர்கள் கனடாவில் அன்டாரியா என்ற இடத்தில் தங்கியுள்ளனர். அங்கு 300 கோடி ரூபா பரிசு தொகைக்கான லொட்டரி சீட்டை வாங்கினர்.

அந்த சீட்டை அபியோலா தனது கைப்பையில் வைத்திருந்தார். இதற்கிடையே லொட்டரி சீட்டு இருந்த அந்த கைப்பை தொலைந்து விட்டது.

ஆனால் அந்த லொட்டரி சீட்டுக்கு தான் பரிசு தொகை விழுந்தது. பரிசு விழுந்ததும் அதை பெற முடியாததால்தம்பதியினர்சோகம்அடைந்தனர்.

அந்த லொட்டரி சீட்டை வீடு முழுவதும் தேடிப் பார்த்தனர். எங்கும் கிடைக்கவில்லை. இதனால் கைப்பை காணவில்லை என பொலிசில் புகார் செய்தனர்.

கடந்த மாதம் முதலாம் ஆம் திகதி தான் பரிசு தொகையை பெற கடைசி நாளாகும். இந்த நிலையில் அவர்கள் வழக்கமாக செல்லும் தேவாலயத்துக்கு சென்றனர். அங்கு ஒரு பகுதியில் காணாமற் போன கைப்பை பொருட்களுடன் கிடந்தது.

இதனால் ஆச்சரியம் அடைந்த அவர்கள் தொலைந்து போன தங்களது கைப்பையை எடுத்து அதைத் திறந்து பார்த்தனர்.

உள்ளே அவர்களது லொட்டரி சீட்டு இருந்தது.

மகிழ்ச்சி அடைந்த அவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு சென்று தங்களது புகாரை மீள பெற்றனர். பின் கடைசி நேரத்தில் பரபரப்புடன் 300 கோடி ரூபா பரிசு தொகையை பெற்றனர்.



பாலஸ்தீனத்தின் அதிகாரப் பூர்வ ஜனாதிபதியாக முகமது அப்பாஸ் (நடுவில்) தலைமையில் புதிய அரசு நேற்று முன்தினம் பதவியேற்றது. அரசு நிர்வாகிகள் ஒன்றாக நிற்பதைப் படத்தில் காணலாம்.

# எகிப்தின் முன்னாள் இராணுவத்தளபதி ஜனாதிபதி தேர்தலில் வெற்றி

(கெய்ரோ)

எகிப்தின் முன்னாள் இராணுவத் தளபதி சிசி ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ள்ார்.

எகிப்தில் முப்பதாண்டுகளுக்கும் மேலாக ஆட்சி நடத்தி வந்த ஹோஸ்னி முபாரக்கை இஸ்லாமிய சகோதரத்துவ இயக்கத்தின் துணையுடன் கடந்த 2012ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்து இறக்கிய முகமது மோர்சி ஜனாதிபதி பதவியை கைப்பற்றினார்.

ஆனால் ஒரு வருடம் கூட ஆட்சி நடத்த முடியாத நிலையில் இவருக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டத்தில் அந்நாட்டு இராணுவம் இவரைக் கைது செய்து காவலில் வைத்தது.

இவருக்குத் துணையாக இருந்த முஸ்லிம் இயக்கமும் இராணுவத்தால் பெரிதும் ஒடுக்கப்பட்டது.

இத்தகைய நடவடிக்கைகளால் கொந்தளிப்பும், வன்முறையும் நிறைந்து காணப்பட்ட அங்கு கடந்த மாதம் இறுதியில் ஜனாதிபதி பதவிக்கான பொதுத் தேர்தல் நடைபெற்றது.

இதில் தனது இராணுவத் தளபதி பதவியைத் துறந்த பீல்ட் மார்ஷல் பட்டா அல் சிசி ஜனாதிபதி வேட்பாளராக களத்தில் இறங்கினார்.

அவருக்கு எதிராக ஹம்தீன் சபஹி என்ற இடதுசாரி வேட்பாளர் ஒருவர் மட்டுமே போட்டியிட்டார்.

குறிப்பிட்டபடி கடந்த மாதம் 25 ஆம் திகதி அங்கு ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் பெரும்பான்மையானோரின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப சிசி 23.78 மில்லியன் அதாவது 96.9 சதவிகித வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றதாக நேறறு முன்தினம்



அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டார்.

அவரை எதிர்த்து நின்ற சபஹிக்கு 3 சதவிகித வாக்குகள் கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பு வெளியானவுடன் கெய்ரோவின் தஹ்ரிர் சதுக்கத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் ஒன்று கூடி வாணவேடிக்கை கொண்டாட்டங்களுடன் தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தி இராணுவ சார்புடைய பாடல்களைப் பாடினர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஈராக்கில் இடம்பெற்ற தாக்குதலில் 35 பேர் பலி

ஈராக்கில் நேற்று முன்தினம் தலைநகர் பாக்தாக்கில் இரு தரப்புக்களிடையே நடந்த தாக்குதலில் 35 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகள் படிப்படியாக வெளியேறி வரும் நிலையில் புரட்சியாளர்களின் பிடியில் உள்ள பகுதிகளை மீட்பதில் அந்நாட்டு இராணுவம் மும்முரம் காட்டி வருகிறது.

தங்களது ஆதிக்கத்தை விட்டுக் கொடுக்க மறுக்கும் புரட்சிக் குழுக்களும் இராணுவப் படைகளை எதிரத்து ஆவேச தாக்குதல்களை நடத்தி வருவதால், இரு தரப்பு மோதலில் நாளதோறும் அப்பாவி பொது மக்கள பலியாவது தொடர்கதையாகி வருகிறது.

இந்நிலையில், மேற்கு பாக்தாத்தின் பலுஜா நகரில் புரட்சியாளர்களின் பிடியில் உள்ள பகுதிகளின் மீது நேற்று முன்தினம்இராணுவ விமானங்கள் குண்டுகளை வீசி நடத்திய தாக்குதலில் 18 பேர் கொல்லப்பட்டனர். மரண முக்கோணம் என்று வர்ணிக்கப்படும் இஸ்கந்திரியா பகுதியில் ஆயுதமேந்திய போராளிகள் நடத்திய தாக்குதலில் 9 பேர் பலியாகினர்.

சலெஹெடின், நினெவே ஆகிய பகுதிகளிலும் போராளிகள் நடத்திய தாக்குதலில் 6 இராணுவ வீரர்கள் உட்பட 8 பேர் உயிரிழந்தனர். மொத்தத்தில், நேற்று முன்தினம் ஒரே நாளில் தலைநகர் பாக்தாத்தில்



மட்டும் 35 உயிர்கள் பலியாகியிருப்பது மனித நேயம் மிக்கவர்களை கவலை கொள்ள வைத்துள்ளது.




# பாகிஸ்தானுக்கான ஆயுத ஏற்றுமதி தடையை ரஷ்யா தளர்த்தியது

பாகிஸ்தானுக்கான ஆயுத ஏற்றுமதி தடையை ரஷ்யா நீக்கியுள்ளதாக ரஷ்ய நாட்டு ஆயுத தயாரிப்பு நிறுவனமான ரோஸ்டெக் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி செர்ஜி செமிஸாவ் கூறியதாவது,

பாகிஸ்தான் நாட்டுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எம்ஐ-35 என்ற போர் ஹெலிகாப்டரை அந்நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது என்று செர்ஜி செமிஸாவ் கூறியுள்ளார்.

இந்த செய்தியை ரஷ்யாவின் இடார்-டாஸ் என்ற செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்தியாவுக்கு பல ஆண்டுகளாக அதிநவீன ஆயுதங்களை ரஷ்யா அதிகளவில் ஏற்றுமதி செய்து வருகிறது.

இந்நிலையில் இந்திய இராணுவத்திடம் உள்ள பழைய ஆயுதங்களை நவீனப்படுத்தும் விதமாக, இஸ்ரேல், பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிடம் ஆயுதங்களை இறக்குமதி செய்ய இந்தியா திட்டமிட்டுள்ளது.

இதன் காரணமாகவே ஆயுத ஏற்றுமதிக்காக இந்தியாவின் எதிரி நாடான பாகிஸ்தானை ரஷ்யா தேர்ந்தெடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

# ஏமன் நாட்டின் போரில் 120 பேர் உயிரிழப்பு

ஏமன் நாட்டில் இந்தவார முற்பகுதியில் நடந்த மோதலில் புரட்சிப் படையினருக்கும் அரச படையினருக்கும் அதிக இழப்புக்கள் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அங்கு யுத்த நிறுத்த ஒப்பந்தமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஏமன் நாட்டில் சமீப காலமாக அரசு படைக்கும், ஷியா முஸ்லிம் புரட்சிப்படைக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் நடந்து வருகின்றன. இந்த நிலையில், கடந்த திங்கள் ஷியா முஸ்லிம்கள் பிடித்து வைத்துள்ள வடக்கு ஏமனில் அரசு படைகள் வான்வழி தாக்குதல்களை நடத்தின. அதைத் தொடர்ந்து அங்கு அரசு படைக்கும், ஷியா முஸ்லிம் புரட்சிப் படைக்கும் இடையே பலத்த சண்டை நடந்தது. இந்த சண்டையில் ஷியா முஸ்லிம் புரட்சிப் படையினர் 100 பேர் கொல்லப்பட்டனர். அரசு படை வீரர்கள் 20 பேரும் உயிரிழந்தனர்.

ஒரு நாள் முழுக்க நடந்த சண்டைக்கு பின்னர் இரு தரப்பிலும் சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் அங்கு தாக்குதல் எதுவும் நடந்ததாக தகவல் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேருந்து விபத்து; 20 பேர் காயம்

வேரபிட்டிய - தெல்தெனிய பிரதான வீதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் சாரதி உட்பட 20 பேர்காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனியார் பேருந்து வண்டி ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளதுடன் சாரதியின் தூக்க மயக்கமே குறித்த விபத்துக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் நேற்று காலை 10.40 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் தெல்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக சிகிச்சைகளுக்காக 6 பேர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# வருடமொன்றிற்கு நூறு பிள்ளைகள் மட்டுமே தத்தெடுக்கப்படுகிறார்கள்

### அமைச்சர் திஸ்ஸகரலியத்த தெரிவிப்பு



(கொழும்பு)

**இலங்கையில் குழந்தைகளைத் தத்தெடுக்கும் தொகையை அதிகரிக்க வேண்டுமானால் மாகாண ஆணையாளரின் சிபாரிசு தேவையென சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸகரலியத்த தெரிவித்துள்ளார்.**

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை ஆறுகளிலும் குளங்களிலும் வீசி செல்வதுடன் பொது இடங்களில் அநாதரவாக விட்டு செல்கின்றனர். இந்த நிலையில் பிள்ளைகளை தத்தெடுக்க பல பெற்றோர்கள் வரிசையில் நிற்கின்றார்கள்.

ஆனால் வருடமொன்றுக்கு நாட்டில் 100 குழந்தைகள் மட்டுமே தத்துக் கொடுப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அநாதரவாக விட்டுச் செல்லப்படும் குழந்தைகளை தத்தெடுக்க விரும்புகிறவர்களுக்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன? என ஹரிசன் எம்.பி. எழுப்பிய கேள்விக்கே மகளிர் விவகார அமைச்சர் மேற்கண்ட பதிலை வழங்கினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட 355 சிறுவர் இல்லங்கள் நாட்டில் இருக்கின்றன. இவற்றுள் 10 ஆயிரத்து 253 சிறுவர்கள் பாதுகாப்பு அரவணைப்பை பெறுகின்றனர். கடந்த 2013 ஆம் ஆண்டில் மட்டும் 253 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இதேவேளை இலங்கையில் 13 சிறுவர்கள் தடுப்புக் காவல் நிலையங்கள் இருக்கின்றன. இவற்றுள் 652 சிறுவர்கள் இருக்கின்றனர்.

அநாதரவாக கைவிடப்படும் பிள்ளைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறோம்.

அத்துடன் அத்தியாவசிய தேவையுடைய பிள்ளைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன.

இந்நிலையில் பிள்ளைகளை தத்தெடுப்பதற்கு பல பெற்றோர்கள் தயாராகவுள்ளனர். ஆனால் வருடமொன்றுக்கு 100 பிள்ளைகளை மட்டுமே இதுவரையில் நாம் தத்துக் கொடுக்கிறோம்.

இந்த தொகையை மேலும் அதிகரிக்க வேண்டுமாயின் அதற்கு மாகாண ஆணையாளர் சிபாரிசு செய்ய வேண்டுமென்றார். (2)

## பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்கள் விற்பனையை தடுக்க நடவடிக்கை

### பொலிஸ் பொறுப்பதிகாரி ரொஹ்ரான்பீரிஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தடைசெய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள் யாழில் விற்பனை செய்யப்படுவதை விரைவில் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.பொலிஸ் நிலையத்தின் சுற்று சூழலுக்கு பொறுப்பான பொலிஸ் பொறுப்பதிகாரி ரொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

யாழ். சிவில் பாதுகாப்பு படைத் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு உள்ளிட்ட இலங்கையின் ஏனைய பாகங்களில் தடைசெய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள் யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண வர்த்தகர்கள் 30 வருட கால யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள் என்பதனாலேயே இது வரை பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள் விற்பனை செய்யும் போது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இனிவரும் காலங்களில் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இதன்போது யாழில் பெருமளவான பிளாஸ்ரிக் பொருட்களை தென்னிலங்கையை சேர்ந்த வர்த்தகர்களே விற்பனை செய்கின்றனர் என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது,

பண்டிகை காலம் மற்றும் ஆலய திருவிழாக்களுக்கு வரும் வியாபாரிகளே அவ்வாறான பொருட்களை சந்தைப்படுத்துகின்றனர். அவர்களுக்கு மாநகரசபை, நகர சபை மற்றும் பிரதேச சபைகளே அனுமதி வழங்குகின்றன.

இனிவரும் காலத்தில் மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபைகள் வியாபார நிலையங்களுக்கு அனுமதி வழங்கும் போது இது விடயமாக கவனம் செலுத்த வேண்டும் எனவும் இனிவரும் காலத்தில் பொலிஸாரும் அது தொடர்பில் கவனம் செலுத்துவர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

## அமைச்சரின் மகனுக்கு ஆறு வருட சிறைத்தண்டனை

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவின் புதல்வர் சத்துர பசன் குணவர்தனவிற்கு 6 வருட கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பசன் குணவர்தன செலுத்திய வாகனம் பாதசாரி ஒருவர் மீது மோதியதில் அந்த பாதசாரி படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இச் சம்பவம் கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி தென் பகுதி பிரதேசம் ஒன்றில் இடம்பெற்றது.

குறித்த விபத்து சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய மாத்தறை நீதவான் நீதிமன்றம் அமைச்சர் பந்துல குணவர்தனவின் மகனுக்கு 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 6 வருட கால சிறைத் தண்டனையை விதித்துள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் நடந்த போது, அமைச்சர் பந்துல குணவர்தனவின் மகன் சாரதி அனுமதிப் பத்திரத்தை கொண்டிருக்கவில்லை என அப்போது தகவல்கள் வெளியாகியிருந்தன.

# பிரிவுத்துயர் பகிர்வு

### கணபதிப்பிள்ளை வீரவாகு



யாழ்.மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வீரவாகு (ஓய்வு பெற்ற ஆசிரியர்) கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதகல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### நடராஜா கண்ணதாசன்



யாழ்.புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா கண்ணதாசன் கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு 7 Boulevard de Menilmontant, 75011 Paris, France, ( Metro Philippe Auguste) என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### முருகேசு செல்லையா



யாழ்.சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டன் Strat Ford ஐ வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்லையா (புல. நோ.கூ.சங்க முகாமையாளர் யாழ்ப்பாணம்) கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு Manor Park Branch Service Chapel, 50 Whitta Road, Manor Park, E12 5DA UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


### திருமதி சண்முகநாதன் மகாலஷ்மி



யாழ்.வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் லண்டன் Ilford ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் மகாலஷ்மி கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு City Of London Cemetery & Crematorium Aldersbrook Rd,Greater London E12 5DQ,UK என்னும் முகவரியில் நடைபெறும்.

### சுந்தரலிங்கம் சங்கரப்பிள்ளை



யாழ்.காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் சங்கரப்பிள்ளை கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave,Markham,ON L3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### சோமலிங்கம் சிவலிங்கம்




குப்பிளானைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சோமலிங்கம் சிவலிங்கம் ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதிரியாரை மீட்கக் கோரி பிரதமருக்கு வைகோ கடிதம்



(சென்னை)

"தமிழகத்தைச் சேர்ந்தவரான கத்தோலிக்க பாதிரியார் அலெக்சிஸ் பிரேம்குமார் ஆப்கானஸ்தானத்தில் ஹிராட் நகரத்துக்கு அருகில் ஜூன் 2 ஆம் திகதி தலிபான் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டார் என்ற செய்தி கடும் அதிர்ச்சியைத் தருகிறது என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.


பாதிரியார் அலெக்சிஸ் வாழ்நாள் முழுவதும் மனிதாபிமான சேவையை பழங்குடி மக்களுக்கு செய்து வந்துள்ளார்.

இலங்கைத் தமிழ அகதிகளுக்கும் மிகுந்த சேவை புரிந்துள்ளார்.

ஆப்கானிஸ்தானத்தில் தன் உயிருக்கு ஆபத்து நேருவதையும் பொருட்படுத்தாமல் பழங்குடி மக்களுக்கு குறிப்பாக, ஏழை மாணவர்களுக்கு பாடசாலைப் பிள்ளைகளுக்கு அர்ப்பணிப்புடன் பணிபுரிந்து வந்துள்ளார்.

அவரது உயிருக்கு எந்த நேரமும் ஆபத்து நேரிடலாம் என அஞ்சுகிறேன். எனவே ஆப்கானிஸ்தான் அரசு மூலமாக தேவையான தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக எடுத்து, பாதிரியார் அலெக்சிஸ் பிரேம்குமாரை மீட்டுத் தர வேண்டும் என இந்தியப் பிரதமரை அன்புடன் வேண்டுகிறேன் என அவர் கூறியுள்ளார்.

# பேருந்து ஆற்றில் விழுந்து 18 இந்தியர்கள் மாண்டனர்



நேபாள நாட்டின் இந்தியர்கள் பயணம் செய்த பேருந்து விபத்தில் சிக்கி 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேபாள நாட்டில் சுவர்கத்வாரி என்ற மலைக்கோவிலில் இருந்து கபிலவஸ்து என்ற இடத்துக்கு ஒரு பேருந்தில் இந்தியாவை சேர்ந்த பக்தர்கள் நேற்று முன்தினம் பயணம் செய்தனர். இந்த பேருந்தில் மொத்தம் 77 பேர் பயணம் செய்தனர்.

இந்த பேருந்து, காத்மண்டுவிலிருந்து 250 கி.மீ. தொலைவில் மலைப் பாதை ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடியது.

அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் ஒரு ஆற்றில் விழுந்தது.

இதில் 7 பெண்கள் உட்பட 15 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 56 பேரில் 3 பேர் சிகிச்சை பலனின்றி இறந்தனர்.

இதை காத்மண்டில் உள்ள இந்திய தூதரகம் உறுதி செய்தது.

இந்தப் பேருந்தில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலானோர் உத்தரபிரதேச மாநிலம், பல்ராம்பூர், கோண்டா மாவட்டங்களை சேர்ந்தவர்கள்.

சம்பவ இடத்துக்கு மீட்புபடைகள் விரைந்தன.

விபத்து நடந்த இடத்தில் இருந்து 10 பேரது உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களில 15 பேர் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரக் கூடும் என தகவல்கள் கூறுகின்றன.



புதுடில்லி சென்றிருந்த முதல்வர் ஜெயலலிதா, மத்திய அமைச்சர் அருண்ஜெட்லியை சந்தித்ததை படத்தில் காணலாம்.


## மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற பாடுபடுவேன்

### பிரதமர் மோடி உறுதி

(புதுடில்லி)

மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி பேட்டி அளித்துள்ளார்.

புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 16 ஆவது மக்களவையின் கூட்டம் தற்காலிக சபாநாயகராக பதவியேற்ற கமல்நாத் தலைமையில் தொடங்கி பின்னர் மறைந்த மத்திய அமைச்சர் கோபிநாத் முண்டேவிற்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர் அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.



இதனையடுத்து செய்தியாளர்களை சந்தித்த பிரதமர் மோடி கூறுகையில், ஜனநாயகத்தின் கோவிலான பாராளுமன்றத்தில் மக்களின் எண்ணங்களும் கனவுகளும் நிறைவேற நாங்கள் பாடுபடுவோம்.

எங்கள் கட்சியை அமோக வெற்றி பெறச் செய்து ஆட்சியில் அமர வைத்து வாழ்த்தியதற்காக உங்கள் அனைவருக்கும் நன்றி என்று கூறினார்.

## ரோந்து படகு வழங்கும் உடன்பாட்டில் அவுஸ்.கைச்சாத்து

இலங்கை கடற்படைக்கு இரண்டாவது ஆழ்கடல் ரோந்துப் படகை வழங்குவதற்கான உடன்பாட்டில் அவுஸ்திரேலியா கைச்சாத்திட்டுள்ளது.

இந்த உடன்பாட்டில் இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் றொபின் மூடி மற்றும் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு மேற்கொள்ளப்படும் சட்டவிரோத படகுப் பயணங்களை தடுப்பதற்காக கடந்த நவம்பர் மாதம் இரண்டு ரோந்துப் படகுகளை இலங்கை கடற்படைக்கு வழங்க அவுஸ்திரேலியா இணக்கம் தெரிவித்திருந்தது.

இவற்றில் முதலாவது படகு கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு இலங்கை கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டது.

இந்நிலையிலேயே இரண்டாவது படகை வழங்கும் உடன்பாட்டில் அவுஸ்திரேலியா நேற்று முன்தினம் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த ஆழ்கடல் ரோந்துப் படகு விரைவில் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டு இலங்கை கடற்படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளது. (2)

## நாட்டை சோமாலியாவாக மாற்ற அரசாங்கம் முயற்சி

### அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

இலங்கையின் மக்கள் தொகையை 2020 ஆண்டில் 35 வீதமாக அதிகரிக்க செய்வது அரசாங்கத்தின் இலக்கு என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கையின் மக்கள் தொகையானது தற்போது 21.4 மில்லியனாகும். இந்த மக்கள் தொகையை 2020 ஆம் ஆண்டில் 28 மில்லியனாக அதிகரிக்கவே அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

நாட்டில் தற்போதுள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப பொருளாதாரம் மற்றும் வறுமையை போக்க முடியாத நிலைமையில், மக்கள் தொகையை மேலும் அதிகரித்து இலங்கையும் எதிர்காலத்தில் மற்றுமொரு சோமாலியாவாக மாற்ற அரசாங்கம் முயற்சித்து வருவதாக நோக்கர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (2)

## 10 இலட்சம் செலவிட்டு பட்டங்கள் பெற முடியும் - டலஸ் அழகப்பெரும

2015 ஆம் ஆண்டில் 10 இலட்சம் ரூபாவை செலவிட்டு இலங்கையில் கல்விப் பட்டங்களை பெற முடியும் என இளைஞர் விவகாரம் மற்றும் நிபுணத்துவ அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இருந்து வருடந்தோறும் சுமார் 8 ஆயிரம் மாணவர்கள் உயர்கல்வி பட்டங்களை பெறுவதற்காக வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். சொந்தங்கள், உறவினர்கள் இல்லாத நாடுகளுக்கு சென்று 60 இலட்சம் ரூபாவை செலவிட்டு பட்டத்தை பெறுவதை விட தாய் நாட்டில் 10 இலட்சம் ரூபாவை செலுத்தி பட்டப்படிப்பை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைப்பது பெரும் நிவாரணமாகும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (2)

## குளவி கொட்டி 9 பேர் பாதிப்பு

(லிந்துலை)

லிந்துலை - மெமலியர் தோட்டத்தில் குளவி கொட்டுக்கிலக்காகி 9 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழுந்து பறித்துக்கொண்டிருக்கும் போது அதில் இருந்து கலைந்து வந்த குளவியே இவ்வாறு தாக்கியுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களில் 5 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாகவும் ஏனைய 4 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் அனைத்தையும் வென்றுவிடும். எனவே நேரத்துக்குப் பணிந்து கடமை புரியுங்கள்.
- ஓர்அறிஞன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சபதங்கள் எடுக்க பழகிக்கொள்ள வேண்டும்

வெற்றிகளும் சாதனைகளும் இலகுவாகக் கிடைத்துவிடக் கூடியவையல்ல. அவற்றைப் பெற்றுக்கொள்வதற்காகக் கடும் பிரயத்தனங்களும் தியாகங்களும் செய்தாக வேண்டும்.

காந்தியடிகளின் தியாகம் நாற்பது நாள் சத்தியாக் கிரகப் போராட்டத்தில் கட்டியெழுப்பப்படுகிறது.

தியாகி திலீபனின் பன்னிரு நாள் உண்ணா விரதம், ஈழத்தமிழர்களின் விடுதலை உணர்வில் ஒரு பெரும் தியாகத்தை வெளிப்படுத்துகிறது.

எனவே, எதுவும் இலகுவாகக் கிடைத்துவிடும் என்று நினைத்தால் அதுவே மிகப்பெரும் மடமைத் தனமாகும். ஒரு அரசியல் தலைவன் தனது கட்சி, தனது அரசியல் பலம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்காகச் செய்ய வேண்டிய அர்ப்பணிப்பு மனித மொழிகளில் விபரிக்கக் கூடியதல்ல.

தனது ஆயுள்பூராகவும் நாளுக்கு ஒரு சில மணித்தியாலங்களே உறக்கம் என்றவாறாகக் கூட நிலைமை இருக்கலாம்.

இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்றுள்ள நரேந்திர மோடியின் அர்ப்பணிப்புக்களும் தியாகங்களுமே, பாரததேசத்தில் பாரதிய ஜனதாவுக்கு மகத்தான வெற்றியைக் கொடுத்தது.

இதுபோலவே தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தமிழ் நாட்டின் அத்தனை விடயங்களையும் மிகவும் உன்னிப்பாக அவதானித்து ஒவ்வொரு விடயத்தையும் சீர்தூக்கி ஆராய்வதில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளார்.

இத்தகைய தியாகங்கள் மிகவும் அவசியம். இவ்வாறு தியாகம் செய்பவர்களே மக்கள் சமூகத்திற்கு வழிகாட்டக் கூடிய தலைவர்களாகப் போற்றப்படுகின்றனர்.

ஆனால், எங்கள் அரசியலில் இவற்றுக்கெல்லாம் இடமே இல்லை. முன்னைய அரசியல் தலைவர்களின் தியாகங்களையும் பின்னைய கூட்டுச்சேர்வால் ஏற்பட்ட பெறுமதிகளையும் வைத்துக்கொண்டு அரசியல் வண்டியில் ஏறி அமர்ந்து பதவி என்னும் இடத்தை அடைவ தான நிலைமையே காணப்படுகின்றது.

இதுவே எங்கள் உரிமைகளை வென்றெடுப்பதில் பெரும் தடைகளையும் இடர்களையும் ஏற்படுத்தி நிற்கின்றன. அரசியல் வெற்றி என்பது சாதாரணமானதல்ல. அதற்குப் பெரும் சபதங்கள் தேவை.

கௌரவர் சேனையை அழிக்க வேண்டும் என்பதற்காகவே கிருஷ்ணபரமாத்மா துரியோதனனின் சிந்தையில் திரௌபதியின் துகிலை களையைச் செய்யும் கயமைத்தனத்தை எண்ணத் தூண்டுகின்றான்.

கௌரவர் சபையில் பாஞ்சாலியின் ஆடை களையப்பட்டதால்தான் அங்கு சபதங்கள் எடுக்கப்படுகின்றன. துச்சாதனனின் செங்குருதி பூசியன்றி, அவிழ்ந்த இச் சடையை முடியேன் என்ற சபதம்தான் தர்மம் வெற்றி பெறச் செய்தது.

ஆக, நாங்களும் சபதங்கள் செய்யவேண்டும். ஒரு குறிக்கோள் இல்லாமல் செயற்படுவது என்ற நிலைமையை மாற்ற வேண்டும்.

தமிழ் மக்களின் நலனுக்காகப் பூரணமாகப் பாடுபட முடியாது என்றால் அரசியல் நமக்குப் பொருத்தம் இல்லை என்று விலகிவிட வேண்டும். அதுவே உத்தமர்களின் செயலாகும்.

எனவே கடந்த காலங்கள் போலல்லாமல் தியாகங்களும் சபதங்களும் நிறைந்ததான அரசியலே தமிழ் மக்களுக்குத் தேவை.

# ஈழத்தமிழர் விவகாரத்தில் உறுதியான நிலைப்பாட்டில் 'ஜெ'

## ரைம்ஸ் ஒவ் இந்தியா தெரிவிப்பு



(சென்னை)

இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா தெரிவித்துள்ளது.

டில்லியில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கையளித்த கடிதத்தில், இலங் கைத் தமிழர் விவகாரம் தொடர்பில் தான் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளதாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் இவ்வூடகம் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளைக கண்டிக்கும் வகையில், ஐ.நாவில் தீர்மானம் ஒன்றை இந்தியா பரிந்துரைக்க வேண்டும் என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

இத்தீர்மானமானது இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் தமிழீழத்தை உருவாக்குவதற்கான கருத்துக்கணிப்பைத் நடத்துவதற்கான கோரிக்கையை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை இனங்கண்டு, அவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்கான அழுத்தங்களையும் இந்தியா கொடுகக வேண்டும் என தனது கடிதத்தில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை, இலங்கை அரசாங்கத்துடன் இந்தியா கொண்டுள்ள தொடர புகளை தமிழக மக்கள் கடுமையாக எதிர்ப்பதாகவும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரானது தமிழ் மக்கள் மீதான திட்டமிடப்பட்ட இனப்படுகொலை மற்றும் இனஅழிப்பு நடவடிக்கை என்பது பல்வேறு சாட்சியங்கள் மூலம் நிரூபணமாகியுள்ளது.

இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்ந்தும் பாரபட்சத்துக்கு உட்படுத்தப்படுவதையும், அவர்கள் மீது மனிதவுரிமை மீறல்கள் மேற்கொள்ளப்படுவதையும் கண்டித்து தமிழக சட்டசபையில் நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டதை ஜெயலலிதா தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)


## தீ மிதிப்பும் பொங்கல் விழாவும்

நவிண்டில் பெரியஞ்சீமா ஞான வைரவர் கோயில் வருடாந்த பொங்கல் விழாவை முன்னிட்டு நடைபெறும் தீ மிதிப்பு வைபவம் நாளை வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் நடைபெறும். தொடர்ந்து வில்லுப்பாட்டு நிகழ்வும் இடம்பெறும்.

மறுநாள் சனிக்கிழமை காலை 5 மணியளவில் பொங்கல்விழா நடைபெற்று தொடர்ந்து காலை 8 மணிக்கு விசேட பூஜைகள் நடைபெறும். (2)

## நீராவியடி ஜெய வீரகத்தி விநாயகர் ஆலய நான்காம் திருவிழா இன்று

### நீராவிக் குளக்கரையான் திருநாள் நான்கு வெள்விடைப் பெருங்காட்சி



தொண்டர்தம் தொண்டனாய் நீறளைந்த
மேனியனாய்
வாசுகியை இடுப்பில் கட்டி வந்தடியார்
துயர் தீர்ப்போன்
வளைக்கையர் மதிமயங்கும்
வல்லபைதன் நாயகனாய்
வெள்விடைப் பெருங்காட்சி
காட்டுகின்றான்! இன்று


*கஜவதனகுஹராஜனார்*

## சத்திய தரிசனம்



கடவுளுக்கும் பக்தனுக்கும் இடையே எப்போதும் நெருங்கிய தொடர்பு உண்டு. தனது பக்தனுக்கு தீங்கிழைக்கப்பட்டால் கடவுளுக்குப் பொறுக்காது. நிச்சயம் அவனை மன்னிக்கமாட்டார். கடவுள் தன்னையேகூட மதிக்காமல் தவறு செய்தவனை மன்னிக்கலாம். ஆனால் தன் அடியவனுக்கு தீங்கு செய்பவனை தெய்வம் நிச்சயம் மன்னிக்காது.

ஒருவன் தெய்வீகம் அடையவேண்டுமானால் முதலில் அவனது தவறுகளை மறப்பதை நிறுத்த வேண்டும். அதுமட்டுமல்ல அடுத்தவர் தவறை மிகைப்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும். அடுத்தவரிடம் இருக்கும் தவறைத் தேடியலைதல் தவறு. அதற்குப் பதில் உன்னிடம் இருக்கும் சிறிய தவறுகளைத் தேடிக்கண்டுபிடி. அடுத்தவரிடம் இருக்கும் குறைகள் எவ்வளவுதான் பெரிதாக இருந்தாலும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்காதே.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## பெண்கள் திருமாங்கல்யத்தை தங்கச்சங்கிலியில் அணிவது சரியா?

இல்லறம் அல்லது நல்லறம் அன்று என்பது ஔவை வாக்கு. திருமணத்தை ஆயிரம் காலத்துப்பயிர் என்றனர். திருமணத்தில் சடங்கு சம்பிரதாயங்கள் எத்தனையோ இடம் பெற்றாலும், மணமகளுக்கு மணமகன் தாலி கட்டுவது தான் ஹைலைட். மாங்கல்ய தாரணம் என்று இதைக் குறிப்பிடுவர். இவ்வாறு திருமணத்தில் திருமாங்கல்யம் அணிவிக்கும் போது மாங்கல்ய தந்துனானேன என்று மந்திரம் சொல்லுவார்கள். தந்து என்றால் கயிறு. மஞ்சள் கயிறு தான் தந்து என குறிப்பிடப்படுகிறது.

மஞ்சள் சரட்டில் தாலி இருந்தால் தான் மங்களம். வறுமையில் வாடும் பெண்கள் கூட தங்கத்தாலியை அடகு வைத்து விட்டு, மஞ்சள் கயிறில் மஞ்சள் கிழங்கை கட்டி தாலியாக அணிந்து கொள்வார்கள். ஆக தாலி என்பது மஞ்சள் சரட்டில் தான் இணைந்து இருக்க வேண்டும்.

கன்னா பின்னாவென்று அழகு சாதனப் பொருட்களை உபயோகிக்கும் இந்தக் காலத்தில் மஞ்சள் கயிறு அணிவதால் அலர்ஜி ஏற்படுகிறது என்று கூட சில பெண்கள் கூறுவது இதென்ன கலாசார சீரழிவு என்ற வருத்தத்தை ஏற்படுத்துகிறது.

தரமான மஞ்சள் சரட்டில் தாலியை அணிந்தால் அலர்ஜி எல்லாம் வராது. இன்றும் கூட மிகப்பெரும் பணக்காரர்கள் கூட கழுத்தில் மஞ்சள் சரட்டில் தான் தாலியை அணிகிறார்கள்.

கழுத்தில் எத்தனை வகையான நகைகள் அணிந்தாலும், மஞ்சள் சரட்டினால் ஆன தாலியை அணிந்தால் அதன் மகத்துவம் தனி தான். இதைத்தான் இறைவனும் விரும்புவான். கணவருக்கும் ஆயுள் நீடிக்கும் என்கின்றனர் மகான்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகங்களுக்கிடையிலான

# பெண்களுக்கான எல்லே போட்டி; கோப்பாய் பிரதேச செயலகம் சம்பியன்



யாழ்ப்பாண பிரதேச பெண்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக பெண்களுக்கான எல்லே இறுதிப் போட்டி அண்மையில் யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் மருதங்கேணி பிரதேச செயலக அணியும் கோப்பாய் செயலக அணியும் மோதிக் கொண்டன. இதில் கோப்பாய் பிரதேச செயலக அணி 06:05 என்ற ரீதியில் வெற்றி பெற்று 2014 ஆம் ஆண்டுக்கான பெண்களுக்கான எல்லே போட்டியின் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (க)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

சுட்டைப்பிராய் கலைமணி விளையாட்டுக் கழகத்தினால் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் அணிக்கு 7 பேர் மற்றும் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளது.

கலந்துகொள்ள விரும்பும் அணிகள் 077 - 21 05 364, 075 55 34 097 என்னும் இலக்கத்தோடு தொடர்புகொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## மாகாணமட்ட வி.போட்டி திகதி மாற்றம்

மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான 3 ஆம் கட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

தவிர்க்க முடியாத காரணத்தினால் பூப்பந்து, சதுரங்கம், பளு தூக்கல் போட்டிகள் நடைபெறவிருந்த திகதிகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண மாகாணக் கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் அறிவித்துள்ளார்.

பூப்பந்து எதிர்வரும் 12, 13,14 ஆம் திகதிகளிலும் சதுரங்கம் 14, 15, 16 ஆம் திகதிகளிலும் பளுதூக்கல் 13,14 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது.

எனவே இப் புதிய மாற்றத்தினை கருத்திற் கொண்டு இப் போட்டியில் பங்கு கொள்ளும் பாடசாலை அணிகள் தங்களுக்குரிய முன் ஆயத்தங்களை செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (க)

# இளைஞர் தின எல்லே போட்டி; காந்தி கழகம் சம்பியன்





தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு ஈச்சந்தீவு உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் உதயசூரியன் இளைஞர் கழகமும் இணைந்து நடத்திய மாவட்ட மட்டத்திலான ஆண்களுக்கான எல்லே போட்டியில் ஆறு முகத்தான்குடியிருப்பு காந்தி விளையாட்டுக் கழகம் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

மாவட்ட மட்டத்திலான ஆண்களுக்கான எல்லேப் போட்டி அண்மையில் ஈச்சந்தீவில் நடத்தப்பட்டது.

தலைவர் த.தினேஸ் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டியில் மாவட்டத்தின் பல பாகங்களிலும் இருந்து இளைஞர் கழக மற்றும் விளையாட்டுக் கழகங்களின் 28 அணிகள் கலந்துகொண்டன.

இப் போட்டியில் ஏறாவூர் பற்றுப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த காந்தி விளையாட்டுக் கழகம் முதலாமிடத்தினையும் மண்முனை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த அருள் விளையாட்டுக் கழகம் இரண்டாமிடத்தினையும் பெற்றுக்கொண்டது. (க)

## இன்றைய போட்டி

(தும்பளை)

உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவுடன் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பொலிகை பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நெடியகாடு - B விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதனை தொடர்ந்து பிற்பகல் 4.30 மணிக்கு நியூட்டன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கழுகுகள் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. (க-19)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532


# பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே; சென்.ஜோன்ஸ் மாணவர்கள் சாதனை

பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற கராத்தே போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளனர்.


பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றது.


இதில் 15,17,19 வயதுப் பிரிவின் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் குமித்தே காட்டா பிரிவில் 7 தங்கம், ஒரு வெள்ளி பதக்கங்களை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இம் மாணவர்களுடன் கல்லூரி அதிபர் என்.ஜே.ஞானப்பொன்ராஜா, விளையாட்டுப் பொறுப்பாசிரியர் குமணன், பொறுப்பாசிரியர் நிசான் மற்றும் பயிற்சி ஆசிரியர் சென்சே விஜயராஜ் ஆகியோரை படத்தில் காணலாம். (க)











யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூடைப்பந்தாட்ட போட்டி ஆரம்ப நிகழ்வு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந் நிகழ்வில் நடுவருக்கு கை கொடுத்து ஆரம்பித்து வைப்பதனையும் போட்டி ஆரம்ப நிலையில் நிற்பதனையும் அணிகள் அணி வகுத்து செல்வதனையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உரையாடுவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி தொடரை வென்றது இலங்கை சிங்கங்கள்



இலங்கை-இங்கிலாந்து அணிகளுக்கிடையில்நடைபெற்ற 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரை இலங்கை அணி 3:2 என்ற ரீதியில் கைபற்றியுள்ளது. ஐந்தாவதும் இறுதியுமான போட்டியில் 6 விக்கெட்களினால் வெற்றி பெற்று இலங்கை அணி தொடரைத் தனதாக்கியது.

இந்தப்போட்டியில்நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பாடிய இங்கிலாந்து அணி 48.1ஓவரகளில்சகல விக்கெட்களையும் இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அலஸ்ரெயர் குக் 56 ஓட்டங்களையும், இயன் பெல் 37 ஓட்டங்களையும், கிறிஸ் ஜோர்டான் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் லசித் மலிங்க 50 ஓட்டங்களிற்கு 3 விக்கெட்களையும். அஜந்த மென்டிஸ் 50 ஓட்டங்களிற்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பாடிய இலங்கை அணி 48.2 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் லஹிறு திரிமான்னே ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்களையும், மஹேல ஜெயவர்த்தன 53 ஓட்டங்களையும, அஞ்சலோ மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் ரெட்வெல் 30 ஓட்டங்களிற்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

லஹிறு திரிமான்னே போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவான அதே வேளை லசித் மலிங்க தொடர் நாய கனாக தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி தரப்படுத்தல்களில் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது. இரண்டாமிடத்தில் இருந்த இந்தியா அணி மூன்றாமிடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ள அதேவேளை இங்கிலாந்து அணி நான்காமிடத்தை தொடர்ந்தும் தக்க வைத்துள்ளது. (க)

## அமைச்சு...

இந்த திருத்தத்தை உடனடியாக செய்யுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுகின்றோம்.

மூன்றாவது முறையாக ஜனாதிபதி பதவிக்கு வரும் வகையில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு நாங்களும் நாடாளுமன்றத்தில் வாக்களித்தோம்.

ஜனாதிபதியின் பொறுப்பின் கீழ் அமைச்சுக்கள் இருப்பதால் பிரச்சினைகள் அதிகம். பாதுகாப்பு அமைச்சு அவரது பொறுப்பின் கீழ் இருப்பது பிரச்சினையல்ல.

அமைச்சு பதவிகளை ஜனாதிபதி கொண டிருப்பது நல்லொழுக்கமுடையதல்ல என்று மக்களே கூற வேண்டும் எனவும் அத்துரலியே ரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## பொலிஸ் அதி...

இலங்கையில் ஒருமித்த உடன் பாடு முக்கியமானது என வலியுறுத்தப்பட்டது.

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை பகிர்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை நாங்கள் இந்தியாவிடம் மிகத் தெளிவாக தெரிவித்தோம்.

இலங்கை அரசாங்கம் 13-வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தாது. அதில் சில திருத்தங்களை செய்ய வேண்டும்.

மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்து நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்துரையாடப் பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற தெரிவுக்குழுவை தொடர்ந்தும் புறக்கணிக்காது அதில் கலந்து கொள்ள வேண்டும் எனவும் பீரிஸ் வலியுறுத்தியுள்ளார். (எ-11)

## உதைபந்தாட்ட போட்டி

உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் கற்கோ வளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவுடன் அணிககு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியை நடத்தி வருகின்றது.

இதில் நேற்று நடைபெற்ற போட்டியில் மைக்கல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்லை B விளையாட்டுக்கழகம் மோதியது.

இப் போட்டியில் வல்லை B விளையாட்டுக்கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற போட்டியல் ஆதிசக்தி B விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதியது.

இப் போட்டியில் ஆதிசக்தி B விளையாட்டுக்கழகம் 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (க-19)

## அமைச்சர் ஹக்கீம்...

ஏற்றுக்கொள்ள முடியாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

30 வயதுக்கும் மேற்பட்டவர்கள் சட்டக் கல்லூரியில் அனுமதி பெற்றுக்கொள்ள முடியாது என புதிய நடைமுறையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சட்ட ரீதியான அங்கீகாரம் இல்லாத நிலையில் ஹக்கீம் இவ்வாறான ஓர் நடவடிக்கையை எடுத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார். நம்பிக்கையில்லா தீர்மானமொன்றை பாராளுமன்றில் நிறைவேற்றுவது குறித்து ஆளும் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## இலங்கை மீது...

என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இம்மாநாட்டில் சிங்கள, தமிழ் மொழிகளில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

இலங்கையின் உள்ளேயே நமது பிரச்சினைகளை தீர்க்கும் நல்ல முயற்சிகளை தூக்கி எறிந்துவிட்டு, இந் நாட்டில்தமிழர்களை வெளிநாடுகளை நோக்கி இந்த அரசு தான் தள்ளுகிறது. உள்நாட்டு பிரச்சினைக்கு உலக நாடுகளிடம் தீர்வை கோருகிறோம் என தமிழர்களை இனி எவரும் குறை கூற கூடாது.

ஐ.நா சபையையும், இந்தியாவையும் நோக்கி நாம் செல்வதற்கு இந்த முட்டாள் அரசாங்கம்தான் காரணம் என்பதை சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை நாட்டு பிரிவினையை எதிர்க்கிறோம். ஆனால், இலங்கை இனப்பிரச்சினைக்கு 13 ஐ அமுல செய்து, 13க்கு மேலே செல்லுங்கள் என பிரதமர் மோடி கடுமையாக கூறிவிட்டார்.

அத்துடன் அவர் நேற்று, தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவை இருகரங்கூப்பி வரவேற்று உரையாடியுள்ளார். அவர்கள் இருவரும் பல்வேறு பிரச்சினைகள் மத்தியில் இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் பற்றியும் உரையாடியுள்ளனர்.

இதன்மூலம் ஒருநாட்டு பிரதமர் தனது நாட்டின் இன்னொரு கட்சியை சார்ந்த ஒரு மாநில முதல்வரை எவ்விதம் நாகரிகமாக நடத்த வேண்டும் என்ற பாடத்தையும் இலங்கை அரசுக்கு பிரதமர் மோடி கற்று கொடுத்துள்ளார்.

13 ஐ பற்றி பேசவே பேசாதீர்கள். பேச வேண்டுமானால் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வாருங்கள் என்று அகம்பாவத்துடன் பேசியவர்கள், விக்னேஸ்வரனின் நல்லெண்ண கருத்தை தூக்கி எறிந்தவர்கள், இன்று 13-ம் திருத்தத்தில் பொலிஸ் அதிகாரத்தை தவிர ஏனையவற்றை அமுல் செய்ய தயார் என சொல்கிறார்கள்.

இனி நாளை இன்னொரு மோடி சந்திப்புக்கு பிறகு பொலிஸ் அதிகாரத்தையும் தருகிறோம் என சொன்னாலும் ஆச்சரியமில்லை.

உள்நாட்டில் நாம் கெஞ்சினாலும் சட்டத்தில் உள்ள உரிமையை கூட வழங்க மாட்டீர்கள். ஆனால், வெளிநாட்டில் பலம் பொருந்தியவர்கள் அழுத்தம் கொடுத்தால் இணங்கு கிறீர்கள்.

ஆகவேதான் கேட்கிறேன், மோடி மந்திரம் வேலை செய்ய ஆரம்பித்து விட்டதா? இவ்வாறு மனோ கணேசன் தனதுரையில் தெரிவித்தார். (எ-11)

## காணாமல் போனவர்...

விக்கவில்லை என்று வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் சி.சிவமோகன் கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், முள்ளியவளையைச் சேர்ந்த விநாயகமூர்த்தி ஜெயன் என்ற குடும்பஸ்தர் கடந்த 27 ஆம் திகதி தனது பிள்ளையின் சிகிச்சை நிமிர்த்தம் வவுனியா வைத்தியசாலைக்கு சென்றிருந்தார்.

மறுநாள் 28 ஆம் திகதி மதியம ஒரு மணியளவில் இருந்து காணாமல் போயிருந்தார். இவர் காணாமல் போனது பற்றிய முறைப்பாடு முள்ளியவளை பொலிஸாருக்கு 29 ஆம் திகதி முறையிடப்பட்டது.

அவர் எந்த பொலிஸ் நிலையத்தில் இருந்தாலும் அறியத்தருவதாக இதன்போது பொலிஸார் கூறியுள்ளனர்.

இதேவேளை காணாமல்போனது பற்றி முறையிடச்சென்றவர்களை வவுனியா பொலிஸார் உங்கள் மாவட்டத்தில் முறைப்பாடு செய்யுமாறு கூறி திருப்பியனுப்பிவிட்டார்கள்.

10 இற்கும் மேற்பட்ட தடவைகள் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு சென்றும் பலன் கிடைக்கவில்லை.

இறுதியில் இறந்த ஒருவரின் உடலை பொலிஸார் காட்டினர். தொடர்ந்து தேடிய குடும்பத்தினர் வவுனியா சிறைச்சாலைக்கு மரக்கறி கொடுப்பவர்களுடாக கடந்த 2 ஆம் திகதி தேடி கண்டுபிடித்தனர்.

வவுனியா நகரில் நடந்த தகராறு ஒன்றில் பார்வையாளராக நின்ற ஒருவர் வவுனியா பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த 29 ஆம் திகதி வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

அவரது தொலைபேசி உட்பட அனைத்தையும் பறித்த பொலிஸார் அவரது குடும்பத்தாருக்கு கூட அறிவித்தல் கொடுக்கவில்லை. தேடித் தேடி திரிந்தும் தகவல் கொடுக்கவில்லை.

இதில் இருந்து எமது மக்கள் எவ்வளவு கேவலமான முறையில் பொலிஸாரால் நடத்தப்படுகின்றார்கள் என்பது தெரியவருகிறது.

எவர் ஒருவர் கைது செய்யப்பட்டாலும் உரிய குடும்பத்தினருக்கு் காரணத்துடன் தெரியப்படுத்த வேண்டியது பொலிஸாரின் கடமையாகும்.

இதையடுத்து கைது செய்யப்பட்ட ஒருவர் காணாமல் போனோர் அட்டவணையில் ஆறு நாட்கள் இருந்ததை இட்டு தனது கண்டனத்தை சிவமோகன் பகிரங்கமாக தெரிவித்தார்.

இனியும் இப்படி நடைபெறாமல் இருக்க பொலிஸார் உரிய நடவடிக்கைகள் எடுப்பார்களா? எனவும் கேள்வியெழுப்பியுள்ளார். (எ-6)

## யாழ்.போத...

ஸ்கானர் உடனடியாக தருவிக்கப்படுவதன் மூலமே இப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந)

## 44 ஆயிர...

முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (எ-11)

## இராணுவ...

படைகளின் தலைமைக் கட்டளை அதிகாரியான சரத் பொன்சேகாவிற்கு எதிராக இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பில் ஜனாதிபதி 2010 ஆம் ஆண்டு கையெழுத்திட்டார்.

இதனையடுத்து அவரது ஜெனரல் பட்டம், இராணுவத்தில் பெறப்பட்ட பதக்கங்கள் மற்றும் ஓய்வூதியம் என்பனபறிக்கப்பட்ட வேண்டும் என உத்தர விடப்பட்டது.

இராணுவ நீதிமன்றத்தில் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் சிறையில் அடைக்கப்பட்ட பொன்சேகா ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் இரண்டு ஆண்டுகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

எனினும் அவரது சிவில் உரிமைகளை புதுப்பிக்க முடியாது போனது.

அதேவேளை பொன்சேகாவுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்த இராணுவத்தினர் அல்லது பொலிஸார் இலக்கு வைக்கப்படவில்லை எனவும் குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார். (எ-11)

## இராணுவத்தில் இணை...

பட்டு வருகின்றது.

அத்தோடு தற்போதும் புதிதாக இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளும் மறைமுகமாகவும் அதே நேரம் துரிதமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முதற்கட்டமாக மாவட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு மிகவும் பெரியளவிலான வரவேற்பு நிகழ்வுகள் பலாலி பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இன்று காலை 10.30 மணியளவில் நடைபெறும் இந் நிகழ்வில் வைத்து நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளது.

இதில் கலந்து கொள்வதற்காக சிவில் பாதுகாப்பு படைத் தலைமையக அத்தியட்சகர் உள்ளிட்ட பலரும் பலாலிக்கு வருகை தரவுள்ளதாகவும் தெரியவருகிறது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் பிரமாண்டமான
# புதியதோர் அத்தியாயத்துடன்




## ANDRA PRINTERS
## பிறிண்டேர்ஸ்




புத்தகங்கள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், போஸ்ரர்கள், லேபில்கள் மற்றும் சகலவிதமான அச்சுப் பதிப்புக்கள்

அழகிய வடிவமைப்புடன் கூடிய விருதுகள், நினைவுச் சின்னங்கள், பதக்கங்கள், வெற்றிக் கேடயங்கள்



T-Shirt & Cap Printing

**Awards, Shields, Medals, Trophies, T-Shirt Printing, ID Card Printing & Mug Printing**



(கி-7564)

**Hotline 0776622981**

பிரதான அலுவலகம் :
379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 8929**

**356A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 221 7279**

கிளைகள்
165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். **021 221 9929**
470/2, கண்டி வீதி (A9), கிளிநொச்சி. **021 720 1275**


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org